இணைப்பு I

(349ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011

முகவுரை

1859 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தமிழ்நாடு காவல் துறை, 150 ஆண்டு காலமாக அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் கடமையாற்றி வருகிறது. தமிழ்நாடு காவல் துறையின் 150-வது ஆண்டு விழாவையொட்டி, மரம் நடுதல், விளையாட்டுப் போட்டிகள், பட்டிமன்றங்கள், பேச்சுப் போட்டிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மாநில காவல் தலைமையகத்தில், கிரானைட் கற்களால் "காவலர் நினைவுச் சின்னம்" ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று, இவ்விழா நினைவு சிறப்பு அஞ்சல் தலை ஒன்றும் வெளியிடப்பட்டது.

2. கடந்த ஓராண்டிலும் சட்டம்-ஒழுங்கு மற்றும் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் செயல் எதுவும் தமிழகத்தில் நிகழவில்லை. பல்வேறு திருவிழாக்கள், போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், முக்கிய நபர் வருகைகள் அனைத்தும் அமைதியாகவே நடந்து முடிந்தன. தொழிலாளர் மற்றும் விவசாயிகள் இடையேயும் அமைதி நிலவியது. புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது, குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில், நிலச்சரிவு சேதங்கள் ஏற்பட்டு, மக்கள் உயிரும், உடமைகளும் பாதிக்கப்பட்டபோது காவல் துறையினர் நிலைமையைச் சீரிய முறையில் கையாண்டு மக்களுக்கு உதவிகள் புரிந்தனர்.

3. காவல் துறை தனது தொடர் முயற்சிகள்மூலம், மாநிலத்தில் தீவிரவாதத் தாக்குதல் எதுவும் நிகழாமல் பாதுகாத்து வருகிறது. கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி, ஊடுருவல்களைக் காவல் துறையினர் தடுத்துள்ளனர். நிலையான கடலோர

[2010 மே 7

பாதுகாப்புப் பணியின் விளைவாக, கடத்தலில் ஈடுபட்டமைக்காக, 7 இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட 10 பேர் கைது செய்யப்பட்டனர். கடலோரப் பாதுகாப்புப் பணியினைக் கண்காணித்து மேம்படுத்தும் நோக்கத்தோடு, ஜூலை 2009, ஜனவரி 2010 ஆகிய மாதங்களில் இந்திய கப்பற்படை, கடலோரக் காவல் படை மற்றும் இதர அரசுத் துறைகளுடன் 'Operation Barricade' மற்றும் 'Rakshak' ஆகிய இரு ஒத்திகைகள் நடத்தப்பட்டன.

4. குற்ற நிகழ்வு தடுப்பு மற்றும் கண்டுபிடிப்புப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் மீட்கப்பட்டுள்ள சொத்துக்களின் மதிப்பு ரூ.56.80 கோடி ஆகும். சிறப்புச் சட்டங்கள் தீவிரமாக அமல்படுத்தப்பட்டதன் விளைவாக, வீடியோ திருட்டு, பொருளாதாரக் குற்றங்கள், திட்டமிட்ட இதர குற்ற நடவடிக்கைகள் ஆகியவற்றின்மீது தனிக் கவனம் செலுத்தப்பட்டது. இன்றியமையாப் பண்டங்களை, குறிப்பாக, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியைக் கடத்தியதற்காக 116 பேரைக் கைது செய்த குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவினர், அவர்களைக் கறுப்புச் சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருள் வழங்கல் பராமரிப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைத்தனர்.

5. மாநில காவல் துறையின் சிறப்புப் படைகளைப் பலப்படுத்துவதற்காகக் கூடுதலாக, பல்வேறு பதவித்தரத்தில் 600 பதவிகளை உருவாக்கிட ஏற்பளிக்கப்பட்டது. மேலும், புதிதாக 171 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

6. காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ், கட்டமைப்பு வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தொலைத் தொடர்பு வசதி, அலுவலக மற்றும் பாதுகாப்புக் கருவிகள், ஆயுதங்கள் வாகன வசதி ஆகியன கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

I. நிருவாக அமைப்பு

7. தமிழ்நாடு காவல் துறையின் தற்போதைய தலைமை இயக்குநர், இந்நாட்டில் காவல் துறைத் தலைமை இயக்குநர் பதவியை வகிக்கும் ஒரு சில பெண் காவல் அதிகாரிகளில் ஒருவர் ஆவார். கூடுதல் காவல் துறை இயக்குநர்கள், காவல் துறைத் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு முதுநிலை அதிகாரிகள் அவருக்கு உதவிகரமாகச் செயல்படுகின்றனர். இத்துறையின்

2010 மே 7]

அனுமதிக்கப்பட்ட செயற்பணியாளர்கள் எண்ணிக்கை 1,04,783 ஆகும். இத்துறையின் நிருவாக அமைப்பை இணைப்பு-1 காட்டுகிறது.

8. வடக்கு, மேற்கு, மத்திய மற்றும் தெற்கு மண்டல காவல் துறைத் தலைவர்களும், சென்னை மாநகர காவல் துறை ஆணையர் தவிர அனைத்துக் காவல் துறை ஆணையர்களும் கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) தலைமையின்கீழ் பணிபுரிகின்றனர். சென்னை மாநகர காவல் துறை ஆணையர் காவல் துறைத் தலைமை இயக்குநரின்கீழ் பணிபுரிந்து வருகிறார். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்கம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், காவலர் வீட்டு வசதிக் கழகம், உள்ளூர்ப் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை, குடிமைப்பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவு, சிறைத் துறை ஆகியவற்றிற்குக் காவல் துறை இயக்குநர்கள் மற்றும் கூடுதல் இயக்குநர்கள் தலைமை வகித்து வருகின்றனர்.

II. சட்டம்–ஒழுங்கு

9. கடந்த ஆண்டில், தமிழகத்தில் பெரிய அளவிலான சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் நிகழாமல், அமைதி நிலவியது. அதே போன்று, சாதி அல்லது மதப் பூசல்கள் ஏதும் பெரிய அளவில் நிகழவில்லை. மாநில காவல் துறையினர் சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினைகளில் திறமையாகச் செயல்பட்டவிதம், சமூக விரோத சக்திகள் மற்றும் போக்கிரிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட பன்முக நடவடிக்கைகள், மாநில நுண்ணறிவுப் பிரிவினர் அளித்த தகவலின்பேரில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமைகளைத் திறமையாகக் கையாண்ட முறைகள் ஆகியவற்றால் இவ்வாண்டு முழுவதும் தமிழ்நாடு அமைதியின் உறைவிடமாகத் திகழ்ந்தது.

10. சாதி ரீதியிலான விழாக்கள், சாதித் தலைவர்கள், சாதி காரணமாக பிற நிகழ்வுகள் குறித்த பல்வேறு நினைவு தினங்களைக் கடைப் பிடிக்கும்போது, வழக்கமாக சாதீய உணர்வுகள் மேலோங்குமெனக் கருதக்கூடிய நிலையில், காவல் துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ததன் பயனாக அவையனைத்தும் அமைதியாக நடந்து முடிந்தன. கோயிலில் வழிபாட்டு உரிமைகள்,

[2010 மே 7

மாநிலத்தின் சில பகுதிகளில் தனியார் நடத்தும் கோயில் விழாக்களில் பங்கு கொள்ளும் உரிமைகள், ஆதி திராவிடர்களைத் தாக்கியவர்கள்மீது நடவடிக்கை, மாநிலத்தின் சில பகுதிகளில் நிலவி வருவதாகக் கூறப்படும் தீண்டாமையை அறவே ஒழித்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து, பல்வேறு அரசியல் கட்சிகள், அமைப்புகள் நடத்திய போராட்டங்களின்போது, காவல் துறையினர் நிலைமைகளை விழிப்புடன் கையாண்டு, அவை பெரிய அளவில் சாதி மோதல் சம்பவங்களாக உருவாகாத வகையில் திறமையாகப் பணியாற்றினர்.

11. கனமழை காரணமாக நிவாரணம் வழங்குதல், வீட்டுமனைப் பட்டா வழங்குதல், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை, முழுமையாக மதுவிலக்கு அமல்படுத்துதல், விலையேற்றம், கடல்சார் மீன்பிடி மசோதா, இலங்கைத் தமிழர் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து, அரசியல் கட்சிகள் நடத்திய போராட்டங்களின்போது, காவல் துறையினர் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து, மிகத் திறமையாக நிலைமைகளைக் கையாண்டனர். அதேபோன்று, தொழிலாளர் பிரச்சினைகளையும் திறம்படக் கையாண்டதால், அமைதியான தொழிற்சூழல் நிலவியது.

12. மாநிலத்தில் மே 2009-ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது மாநில காவல் துறையினர் ஆற்றிய பணி, தேர்தல் ஆணையத்தின் பாராட்டினைப் பெற்றது. காவல் துறையின் தொடர் முயற்சி காரணமாக ஏழு சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களும் அமைதியாக நடந்து முடிந்தன.

13. மாநிலத்தில், மத ரீதியாக எவ்வித அசம்பாவிதமும் இன்றித் தொடர்ந்து அமைதி நிலவி வருகிறது. மத அடிப்படைவாதிகளின் நடவடிக்கைகள் முழுவதுமாகக் கண்காணிக்கப்பட்டன. மத நல்லிணக்கத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடிய, தடை செய்யப்பட்ட அடிப்படைவாத அமைப்புகளின் நடவடிக்கைகளை மாநில நுண்ணறிவுப் பிரிவினர் கூர்ந்து கண்காணித்து வருகின்றனர். விநாயகர் சிலை கரைப்பு ஊர்வலங்கள் அனைத்துப் பகுதிகளிலும் குறிப்பாக, மதப்பூசல்கள் எழக்கூடிய திண்டுகல் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள முத்துப்பேட்டை ஆகிய இடங்களில் அமைதியாக நடந்து முடிந்தன. அதே போன்று, 17-வது ஆண்டாகக் கடைப்பிடிக்கப்பட்ட பாபர் மசூதி இடிப்பு தினத்தன்று அசம்பாவிதம் ஏதும் நிகழாமல் கண்காணிக்கப்பட்டது.

2010 மே 7]

15-8-2009 அன்று, தஞ்சை மாவட்டம், தாராசுரத்தில் மனித நீதிப் பாசறை நடத்திய அணிவகுப்பு மற்றும் பொதுக்கூட்டம் ஆகியவற்றில் அசம்பாவிதம் ஏதும் நிகழாமல் காவல் துறையினர் திறமையாகச் செயல்பட்டனர்.

14. நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகள், மாநில எல்லைப் பகுதிகளை பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவருதல், வனப் பகுதிகளில் அடிக்கடி தேடுதல் வேட்டை நடத்துதல், இடதுசாரி தீவிரவாத இலக்கியப் படைப்புகளைப் புழக்கத்தில் விடுவோரைத் தீவிரமாகக் கண்காணித்தல், பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் நலத் திட்டங்களை அமல்படுத்துதல், வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல் மற்றும் அண்டை மாநிலங்களுடன் நல்லுறவைப் பேணுதல் போன்ற நடவடிக்கைகளால், தமிழ்நாட்டில், குறிப்பாக, தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி மாவட்டங்களில் இடதுசாரி தீவிரவாதிகளின் செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டு, தமிழகத்தில் தீவிரவாதிகள் காலூன்ற முடியாது என்ற நிலை உருவாக்கப்பட்டது. கடந்த 19 ஆண்டுகளாகத் தலைமறைவாக இருந்துவந்த குற்றவாளியும், தமிழர் பாசறையின் முன்னாள் உறுப்பினருமான சிதம்பரம் (எ) தினேஷ் (எ) சிவக்குமார் (எ) ஜீவா (எ) வைத்தி 11-1-2010 அன்று, சென்னையில் கைது செய்யப்பட்டார்.

15. தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழக விடுதலை இயக்கம் போன்ற தடை செய்யப்பட்ட அமைப்புகள் மற்றும் இடதுசாரி மாவோயிச தீவிரவாத அமைப்புகள், சட்டம் ஒழுங்கு பராமரிப்பிற்குக் குந்தகமான வகையில் செயல்படாமல் தடுக்கும் பொருட்டு, அந்த அமைப்புகளின் நடவடிக்கைகள் கூர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

16. இலங்கையில் நடந்து வந்த உள்நாட்டுப் போர் அண்மையில் முடிவுக்கு வந்ததையடுத்து, கடலோர மாவட்டங்களில் ரோந்துப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அகதிகள் என்ற போர்வையில் இலங்கைப் போராளிகள் ஊடுருவாமல் தடுக்க, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதோடு, தமிழ்நாட்டுக்கு வரும் அகதிகள் நன்கு பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றனர். கடலோரப் பகுதிகளில் கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த காவல் துறை தனது பல்வேறு பிரிவுகளைப் பணியில் ஈடுபடுத்தி, அதன்மூலம் பாக்ஜலசந்தி வழியாகக் கடத்தும் நடவடிக்கைகள் கட்டுக்குள் வைக்கப்பட்டன. இவ்வாண்டில், இரண்டு கடத்தல் வழக்குகள்

[2010 மே 7

கண்டுபிடிக்கப்பட்டு, 10 பேர் கைது செய்யப்பட்டனர். இலங்கைக்குப் பொருட்களைக் கடத்த முற்பட்ட சயந்தன் மற்றும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டு இங்கிலாந்து நாட்டில் வசிக்கும் ஜெயநாதன் ஆகியோர் கைதானவர்களில் முக்கியமானவர்களாவர். அவர்களிடமிருந்து ஓபிஎம் (Out Board Machine) வகை இஞ்சின்கள், ஜெலட்டின் குச்சிகள், செயற்கைக்கோள் தொலைபேசிகள், திசைகாட்டும் கருவிகள் (ஜிபிஎஸ்), மடிக் கணினி, வாக்கி டாக்கி கருவிகள், பேட்டரிகள் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டன.

17. தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுக்கவும், சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி மீனவர்கள் செல்லாத வகையிலும், கடலோரக் காவல் படை மற்றும் இந்திய கப்பற் படையினருடன் இணைந்து, கடல் பகுதியில் ரோந்துப் பணிகளை மாநில காவல் துறையினர் தீவிரப்படுத்தினர். 17-3-2010 நிலவரப்படி 2006 ஜனவரி முதல் 24,695 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர். ஏறத்தாழ 70,000 அகதிகள் மாநிலத்தில் உள்ள 113 அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். போராளிக் குழுக்களுடன் தொடர்பு உள்ளதா என்பதைக் கண்டறிவதற்கென அகதிகளின் நடவடிக்கைகள் குறித்து நுண்ணறிவுப் பிரிவினர் தகவல்கள் சேகரித்து, கூர்ந்து கண்காணித்து வருகின்றனர். இலங்கைத் தமிழர்களுக்கான முகாம்கள் அனைத்திலும் போதிய அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டு, அவர்களின் அன்றாடத் தேவைகளுக்காகப் பண உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது.

காவல் துறையின் பாதுகாவலின்போது ஏற்பட்ட மரணங்கள்

18. விசாரணை அல்லது வினவுவதற்காகக் காவல் நிலையங்களில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் எதிரிகளை உன்னிப்பாகக் கண்காணித்து அவர்களைக் கவனமாகக் கையாளுவது குறித்து அனைத்துக் காவல் துறை ஆணையர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டில், காவல் துறை பாதுகாப்பின் போது ஐந்து மரண சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

காவல் துறையினரின் துப்பாக்கிச் சூடு

19. தவிர்க்க முடியாத தருணங்கள் நீங்கலாக, துப்பாக்கிச் சூடு நடத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்றும், சட்டம்-ஒழுங்கு

2010 மே 7]

நிலைமைகளைக் கையாளும் போது நுண்ணறிவுத் தகவல்களை முன்கூட்டியே திரட்டி, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டுமென்றும், பீதியடையக் கூடிய சூழல்கள் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமென்றும் காவல் துறை அதிகாரிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டில், காவல் துறையினர் தவிர்க்க முடியாத எட்டு சம்பவங்களில் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று. அவற்றில், இரண்டு கலவரங்களைக் கட்டுப்படுத்தவும், எஞ்சிய ஆறு நிகழ்வுகள் அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய குற்றவாளிகள்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் ஆகும். (2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த காவல் துறை துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் குறித்த விவரங்கள் இணைப்பு-2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.)

III. குற்ற நிகழ்வு நிலவரம்

20. இணைப்பு 3-ல் காட்டப்பட்டுள்ளவாறு 2009 ஆம் ஆண்டு சொத்து தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 21,297 என்பது 2008 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 19,735 என்பதை விடச் சற்று அதிகமானது ஆகும். இக்குற்ற நிகழ்வுகள் மேலும் அதிகரிப்பதைத் தடுக்கவும், அதனைக் கணிசமாகக் குறைக்கவும் தமிழகக் காவல் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 2009 ஆம் ஆண்டில் சொத்து தொடர்பாக பதிவு செய்யப்பட்ட 21,297 குற்ற வழக்குகளில் 16,830 குற்ற வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2007, 2008 மற்றும் 2009-ல் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகள் மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட குற்ற வழக்குகள் குறித்த விவரங்கள் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டில் களவு போன ரூ.80.26 கோடி மதிப்பிலான சொத்துகளில் ரூ.56.80 கோடி மதிப்பிலான சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 2008 ஆம் ஆண்டைவிட 2009 ஆம் ஆண்டில் குறைந்துள்ளது. மேலும், மக்கள் தொகையின் அடிப்படையிலான குற்ற விகிதம் 2009 ஆம் ஆண்டு கணிசமாகக் குறைந்துள்ளது. அதன் விவரம் இணைப்பு 5-ல் கொடுக்கப்பட்டுள்ளது. வன்செயல் குற்றங்கள் தொடர்பாகக் கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட, குற்றப் பத்திரிக்கைத் தாக்கல் செய்யப்பட்ட, விசாரணையில் உள்ள வழக்குகள் மற்றும் பிற வகைகளில் முடிக்கப்பட்ட வழக்குகள் கொலை மற்றும் கொலைக்கான முயற்சி,

[2010 மே 7

காயம் மற்றும் கலவரம் தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்த விவரம் இணைப்பு 6-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற கொலைச் சம்பவங்களுக்குக் குடும்பச் சண்டை, வாய்த் தகராறு, சொந்தப் பகை, காதல் விவகாரங்கள் ஆகியவை மிக முக்கியக் காரணங்களாக இருந்துள்ளன. 2007 முதல் 2009 வரை நிகழ்ந்த கொலைகளுக்கான காரணங்கள் இணைப்பு 7-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான குற்றம்

21. பெண்களுக்கு எதிரான குற்றங்களான கற்பழிப்பு, வரதட்சணை மரணம், கணவர் மற்றும் உறவினர் கொடுமை மற்றும் மானபங்கம் போன்றவை தொடர்பாக 2009 ஆம் ஆண்டில் பதிவான 3,492 வழக்குகளானது, கடந்த 2008 ஆம் ஆண்டில் பதிவான 4,133 வழக்குகளை விட குறைவான நிலையில் காணப்படுகிறது. 2007 முதல் 2009 வரை பெண்களுக்கு எதிராகப் பதிவான குற்ற வழக்குகள், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட, புலன் விசாரணையில் உள்ள, மற்ற வகையில் தீர்க்கப்பட்ட வழக்குகளின் விவரம் இணைப்பு 8-ல் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் மகளிர் உதவி மையம்/குழந்தைகள் உதவி மையம், ஆலோசனை மையங்கள் போன்றவற்றை அமைத்து, பெண்களின் சட்டபூர்வமான உரிமைகள் குறித்து அவர்களுக்கு மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

IV. போக்குவரத்து விபத்துகள்

22. 2009 ஆம் ஆண்டில், 60,794 சாலை விபத்துகள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் 12,727 விபத்துகள் உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளாகும். அதன் விளைவாக, 13,746 பேர் மரணமடைந்துள்ளனர். தமிழகத்தில் ஒரு கோடிக்கும் அதிகமான வாகனங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 2009 ஆம் ஆண்டில் மட்டும், ஏறக்குறைய 8 இலட்சம் வாகனங்கள் அதிகரித்துள்ளன. வாகன விபத்துகளை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், காவல் துறை, போக்குவரத்துத் துறை, நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகிய சம்பந்தப்பட்ட அனைத்து நிர்வாகத் துறை அலுவலர்களும் இணைந்து செயல்பட உள் துறை முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இணைப்பு 9-ல்

2010 மே 7]

குறிப்பிட்டுள்ளவாறு, 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த போக்குவரத்து விபத்துகளின் எண்ணிக்கையினை வாகன எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவற்றின் விகிதாச்சாரம் குறைவது தெரிய வருகிறது.

V. காவல் ஆணையம் (போலீஸ் கமிஷன்)

23. திரு. ஆர். பூர்ணலிங்கம், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களது தலைமையில் அமைந்த மூன்றாவது காவல் ஆணையம் 444 பரிந்துரைகளை அளித்தது. இப்பரிந்துரைகளை அரசு, உயர் நிலைக் குழு ஒன்றினை அமைத்துப் பரிசீலனை செய்து 278 பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு அவற்றை அமல்படுத்த ஆணை பிறப்பித்தது.

VI. காவல் துறை நவீனமயமாக்கல்

24. தமிழக காவல் துறையை 2001-2002 ஆம் ஆண்டு முதல் ஒரு தொடர் நடவடிக்கையாக நவீனமாக்கி வருகிறது. தமிழகக் காவல் துறை நவீனமாகவும், திறமையாகவும், மக்களின் உற்ற நண்பனாகவும் விளங்க வேண்டும் என்ற முக்கிய நோக்கத்தில், அரசு திட்டமிட்டு இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பயங்கரவாதத்தை எதிர் கொள்ளுதல், கணினிசார் குற்றங்கள், வீடியோ திருட்டு, திட்டமிட்ட குற்றங்கள், தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், பொருளாதாரக் குற்றங்கள் போன்றவற்றைக் கையாள்வதில் காவல் துறையினரின் திறனை மேம்படுத்த உயர் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைய, காவல் துறையில் தகவல் தொடர்பு, வாகன வசதி, கணினிமயமாக்கம், ஆயுதங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு நவீன கருவிகள் வாங்கும் திட்டங்கள் மத்திய, மாநில அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் தற்போதைய மற்றும் எதிர்காலச் சவால்களைச் சந்திக்க காவல் துறை போதுமான அளவில் தயார்படுத்தப்படுகிறது.

25. தமிழ்நாடு 1,076 கிலோ மீட்டர் கடலோர பகுதிகளைக் கொண்ட பெரிய மாநிலமாகும். 2009 ஆம் ஆண்டில் தமிழக மக்கள் தொகை 6.65 கோடியாகும். பயங்கரவாதிகள், நக்சலைட்டுகள், மத அடிப்படைவாதிகள் மற்றும் தமிழ்த் தீவிர பற்றாளர்கள் ஆகியோரின் நடவடிக்கைகள் தற்போதுள்ள நவீன வசதியைப் பயன்படுத்தி கூர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

[2010 மே 7

தேசிய அளவிலும், அண்டை மாநிலங்களிலும், மாவோயிஸ்ட்கள், பயங்கரவாதிகள், மத அடிப்படைவாதிகள் ஆகியோரின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதால், தமிழகத்தில் அத்தகைய நடவடிக்கைகள் காலூன்றாமல் தடுத்திட காவல் துறையைப் பலப்படுத்துதல் மிகவும் அவசியமாகிறது.

26. காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் தமிழக காவல் துறைக்கு 2009-2010 ஆம் ஆண்டு, மத்திய அரசின் நிதி ஒப்பளிப்பு ரூ.60.67 கோடியும், மாநில அரசின் பங்களிப்பாக ரூ.20.22 கோடியும் சேர்ந்து மொத்தமாக ரூ.80.89 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டிலிருந்து மத்திய, மாநில நிதி ஒப்பளிப்பு விவரம் இணைப்பு 10-லும், இத்திட்டத்தின்கீழ் பல்வேறு இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பற்றிய விவரம் இணைப்பு 11-லும் அளிக்கப்பட்டுள்ளன.

VII. நலத் திட்டங்கள்

27. காவல் துறையினர் உயரிய மன உறுதியுடன் கடமையாற்ற அவர்களின் நலனுக்கு முக்கியத்துவம் அளித்து வரும் அரசு, பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

i) பொது மக்கள் குறைகளைக் களைதல்

செப்டம்பர் 2009-ல் இருந்து மாநகரங்களில் காவல் ஆணையாளர்களும், மாவட்டங்களில் காவல் துறை கண்காணிப்பாளர்களும் ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் திங்கட் கிழமைகளில் பொதுமக்களின் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை நடத்த வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி காவல் ஆணையாளர்களும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களும் 1-9-2009 முதல் இக்கூட்டங்களை நடத்தி வருகின்றனர். இதுவரை மொத்தத்தில் 9,535 மனுக்கள் பெறப்பட்டு அவற்றுள் 5,510 மனுக்கள் மீதான குறைகள் களையப்பட்டுள்ளன.

ii) மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம்

மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், காவல் ஆய்வாளர்/உதவி ஆய்வாளர் மற்றும் அந்தப் பதவி தரத்தின்கீழ் உள்ள காவல் பணியாளர்களுக்கு "காக்கி" குடும்ப அட்டை மூலமாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள்

2010 மே 7]

மானிய விலையில் வழங்கப்படுகின்றன. 31-3-2010 ஆம் தேதி நிலவரப்படி 60,870 காவல் பணியாளர்கள் மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டத்தில் பயனடைந்து வருகிறார்கள்.

iii) தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடைத் திட்டம்

காவல் ஆய்வாளர் மற்றும் அப்பதவித் தரத்திற்குக்கீழ் உள்ள காவல் பணியாளர்கள், அமைச்சுப் பணியாளர்களில் கண்காணிப்பாளர் மற்றும் அப்பதவித் தரத்திற்குக்கீழ் உள்ள அனைத்து பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு நிதியுதவியும், இதர நிவாரணமும் வழங்கும் நோக்கத்துடன் இத்திட்டம் 1957 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மாநில அரசின் நிதி ஒதுக்கீடு, காவல் பணியாளர்கள் மற்றும் காவல் அமைச்சுப் பணியாளர்களிடமிருந்து சந்தா வசூலித்தும், காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளிடம் நன்கொடை வசூலித்தும், இத்திட்டத்திற்கு நிதி திரட்டப்படுகிறது.

(அ) இந்த நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப நிவாரணம் பின்வருமாறு:-

சந்தாதாரர் இறக்க நேரிட்டால் - ரூ.10,000/-

சந்தாதாரரின் குடும்ப உறுப்பினர்கள் இறக்க நேரிட்டால் - ரூ.5,000/-

(ஆ) கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் உயர் கல்வி பயிலும் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை, இத்தொகை ரூ.3,000/-லிருந்து ரூ.9,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

iv) தமிழ்நாடு காவல் பணியாளர் மருத்துவக் காப்பீட்டு நிதியம்

தமிழக அரசுப் பணியாளர்களுக்கென அரசு உருவாக்கிய புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை, தமிழக காவல் துறைப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தியதன்மூலம், ஏற்கனவே தமிழக காவல் துறைப் பணியாளர்களின் மருத்துவ வசதிக்கென ஏற்படுத்தப்பட்டிருந்த, தமிழ்நாடு காவல் பணியாளர் உடல் நல பாதுகாப்பு நிதியம் மாற்றியமைக்கப்பட்டது. காவல் துறைப் பணியாளர்கள் ஒவ்வொரு 4 ஆண்டுக்கும் ரூ.2 இலட்சம் மதிப்பில் தனது, மனைவி அல்லது கணவர் மற்றும் தன்னைச் சார்ந்துள்ள குழந்தைகளின் மருத்துவ உதவிகளைப் பெறலாம்.

[2010 மே 7

v) கருணைத் தொகை

காவல் பணியாளர்கள் தங்களது பணிகளை மேற்கொள்ளும்போது, குறிப்பாக சட்டம்-ஒழுங்கு நிலைமைகளைக் கையாளும்போது, பல்வேறு சவால்களையும், அச்சுறுத்தல்களையும் சந்தித்து வருகின்றனர். மேலும், காயமடையும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. எனவே, வீர தீரச் செயல் புரிந்த காவல் பணியாளர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு இழப்பீடு அளிக்கும் வகையில், தமிழக அரசு கருணைத் தொகையை வழங்கி வருகிறது. அரசு ஆணை (நிலை) எண் 284, உள் (காவல்-12) துறை, நாள்: 6-4-2009-ன்படி காவல் பணியாளர்கள் அவர்கள் வகிக்கும் பதவி மற்றும் பணியாற்றும் பிரிவு என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் அல்லது அவர்கள் வாரிசுதாரர்களுக்குக் கருணைத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது:-

1.	உயிரிழப்பு	ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)
2.	நிரந்தர ஊனம்	ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)
3.	பணியில் ஈடுபட இயலாதவாறு ஒரு உடலுறுப்பு இழப்பு / ஒரு கண் பார்வையிழப்பு / செவித்திறன் இழப்பு / பாதம் மற்றும் விரல்கள் இழப்பு	ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)
4.	தீக்காயம், துப்பாக்கி தோட்டா தாக்கியதால் ஏற்பட்ட காயம் மற்றும் பல்வேறு பகுதிகளில் எலும்பு முறிவு	ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)
5.	சிறு காயம்	ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

மேலும், மேலே வரிசை எண் 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள கருணைத் தொகையுடன், இறந்த காவல் பணியாளர் கடைசியாகப் பெற்ற ஊதியம் இறந்து போனவர் ஓய்வு பெற வேண்டிய நாள் வரும் வரையில் அவரது சட்டப்படியான வாரிசுகளுக்கு குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

2010 மே 7]

vi) பரிசுத் திட்டங்கள்

10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டம் மற்றும் மாநகரங்களில் அதிக மதிப்பெண்கள் பெற்று, முதல் பத்து இடங்களைப் பிடிக்கும் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்குப் பரிசுத் தொகை வழங்கும் நோக்கத்தோடு இத்திட்டம் தொடங்கப்பட்டது. 10 ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே ரூ.6,500/-, ரூ.4,500/-, ரூ.2,500/-ம், நான்கு முதல் 10 இடங்களைப் பெற்றவர்களுக்கு ரூ.2,000/-ம், 12 ஆம் வகுப்பில், முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே ரூ.7,500/-, ரூ.5,500/-, ரூ.3,000/-ம், நான்கு முதல் 10 இடங்களைப் பிடித்தவர்களுக்கு ரூ.2,500/-ம் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், 2009 ஆம் ஆண்டு 701 பயனாளிகள் ரூ.21,88,000/- பரிசாகப் பெற்றுள்ளனர். இதன் பொருட்டு அரசு ரூபாய் ஒரு கோடியை தனது பங்களிப்பாக அளிக்கிறது.

vii) தமிழ்நாடு காவல் நூற்றாண்டு கல்வி உதவித் தொகை நிதியம்

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் நூற்றாண்டு படிப்பு உதவித் தொகை நிதியம் தொடங்கப்பட்டது. காவல் ஆய்வாளர் மற்றும் அப்பதவித் தரத்திற்குக்கீழ் உள்ள காவல் பணியாளர்கள், அமைச்சுப் பணியாளர்களில் கண்காணிப்பாளர் மற்றும் அப்பதவித் தரத்திற்குக்கீழ் உள்ள அனைத்து பணியாளர்கள் காவல் துறைப் பணியாளர்களின் தகுதி வாய்ந்த குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்கி, அவர்களை ஊக்குவிப்பதே இந்நிதியத்தின் நோக்கமாகும். ஆண்டு நன்கொடை மற்றும் ஒட்டுமொத்தப் பங்களிப்புத் தொகைமூலம் நிதி திரட்டப்படுகிறது. இப்படிப்புதவித் தொகையைப் பெற விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு ஒரே தவணையாக ரூ.3,000/-லிருந்து ரூ.9,000/- வரை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2009 ஆம் ஆண்டில் 4,613 பயனாளிகள் ரூ.2,74,74,500/-ஐ பெற்றுள்ளனர்.

viii) தமிழ்நாடு அரசு சிறப்புப் படிப்புதவித் தொகை நிதியம்

கல்வியில் சிறந்து விளங்கி, நல்ல எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கும் காவல் துறைப் பணியாளர்களின் வாரிசுகளை ஊக்குவிப்பதற்காகவும், அவர்கள் மேற்படிப்பைத் தொடர்வதற்காகவும், 18-7-2008 அன்று அரசு சிறப்புப் படிப்புதவி

[2010 மே 7

நிதியத்தை அறிமுகப்படுத்தியது. இந்நிதியத்தின்கீழ், 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் 100 மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.20,000/- அல்லது நான்கு ஆண்டுகளுக்குக் கல்லூரிக் கல்விக் கட்டணம் அல்லது படிப்பு முடியும் வரையிலான கல்விக் கட்டணம், இவற்றில் எது குறைவோ, அது உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 2009-2010 ஆம் ஆண்டில், இந்நிதியத்திலிருந்து ரூ.17,77,860/- (ரூபாய் பதினேழு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரத்து எண்ணூற்று அறுபது மட்டும்) வழங்கப்பட்டுள்ளது.

ix) காவல் மருத்துவமனைகள்

காவல் துறை பணியாளர்களின் மருத்துவ வசதிக்காக சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், புனித தோமையார் மலை, வேலூர், கடலூர், விருதுநகர், திருநெல்வேலி (புறநோயாளி பிரிவு மட்டும்), ஆவடியிலுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் 2 ஆம் அணி மற்றும் மணிமுத்தாறிலுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் 9 ஆம் அணி ஆகிய 12 இடங்களில் காவல் துறை மருத்துவமனைகள் இயங்குகின்றன.

VIII. பெண் காவலர்கள்

28. தமிழ்நாட்டில் 10,130 பெண் காவலர்கள் அனைத்து காவல் துறைப் பணிகளிலும் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். 196 மகளிர் காவல் நிலையங்கள் பெண் காவலர்களால் நிருவகிக்கப்படுகின்றன. தமிழக காவல் துறையிலேயே மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது அதிக அளவில் பெண் காவலர்கள் பணிபுரிகின்றனர்.

29. பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் அளிக்கும்போது, அவர்களுக்கு உரிய ஆலோசனைகள் அளிப்பதோடு, அப்புகார் சம்பந்தப்பட்ட வழக்குகளையும் பெண் காவலர்கள், புலன் விசாரணை செய்கின்றனர். மகளிருக்கான சட்ட உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு மாவட்ட அளவில் நடமாடும் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வருவாய்த் துறை அதிகாரி, வழக்கறிஞர், சுகாதாரப் பணியாளர், ஆசிரியர் ஆகியோருடன் செயல்பட்டு வரும் நடமாடும் ஆலோசனை மையங்கள் மூலமாகப் பெண் காவலர்கள் கிராமங்களுக்குச் சென்று, ஒலி பெருக்கி பொருத்தப்பட்ட வேனில் வண்ணத் தொலைக்காட்சி மற்றும் வீடியோ படம் ஆகியவைமூலம்

மகளிருக்கான சட்ட உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

IX. தமிழ்நாடு காவல் துறையில் உள்ள சிறப்புப் பிரிவுகள்

குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை

30. 1906 ஆம் ஆண்டு 37 பணியாளர்களுடன் சிறிய அளவில் தொடங்கப்பட்ட சென்னை மாகாண குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையானது தற்போது ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநரின் தலைமையில் 583 காவல் பணியாளர்களைக் கொண்ட மிக வலிமையான அமைப்பாக வளர்ந்து செயல்படுகிறது. இத்துறையில், பல்வேறு மாவட்டங்களில் உள்ள 34 காவல்படைப் பிரிவுகளுடன், திட்டமிட்ட குற்ற நிகழ்வுகளைக் கவனிப்பதற்கான 7 பிரிவுகளும், கள்ள நோட்டு அச்சடித்தலைத் தடுக்க 4 பிரிவுகளும் பல்வேறு மாவட்டங்களிலும், காவல் ஆணையரகங்களிலும் செயல்பட்டு வருகின்றன. கணினிவழி குற்றத் தடுப்புப் பிரிவு, ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவு, காவல் பணி ஆராய்ச்சிப் பிரிவு ஆகியவை இத்துறையின்கீழ் இயங்கும் மற்ற சிறப்புப் பிரிவுகள் ஆகும். தமிழக அரசு, காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் ஒப்படைக்கும் வழக்குகளைப் புலன் விசாரணை செய்வதே இப்பிரிவின் தலையாய கடமையாகும்.

31. 2008 ஆம் ஆண்டில், 155 வழக்குகளும், 2009 ஆம் ஆண்டில் 209 வழக்குகளும் புலன் விசாரணைக்காகக் குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. இவற்றில் 171 வழக்குகளில், புலன் விசாரணை முடிக்கப்பட்டு, இறுதி அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. திண்டுக்கல்லைச் சேர்ந்த டாக்டர் பாஸ்கரன் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கு கண்டுபிடிப்பு, பனையூரில் நடைபெற்ற இரட்டைக் கொலை வழக்கு குறித்த தீர்வு, கடவுச்சீட்டு மோசடி வழக்குகளைக் கையாளுதல், உர மோசடி வழக்கு விசாரணை மற்றும் பிணையில் வெளி வரமுடியாத 124 பிடியாணைகளைச் சார்வு செய்தது ஆகியவை, 2009 ஆம் ஆண்டில், இத்துறை செய்த சாதனைகளாக விளங்கி வருகின்றன. குறிப்பிட்ட காலமுறைப்படி, முறையான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அதன் விளைவாக கள்ள ரூபாய் நோட்டு வழக்குகளில் தொடர்புடைய பல்வேறு பயங்கர குற்றவாளிகள் கைது செய்யப்பட்டதோடு, கள்ள ரூபாய் நோட்டு வழக்குகள் விசாரணை மேம்படுத்தப்பட்டது.

[2010 மே 7

32. குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையின் கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவானது, ஆன்லைன் லாட்டரி ஊழலில் ஈடுபட்ட நைஜீரிய நாட்டைச் சேர்ந்த ஒரு கும்பல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய வழக்குகளைக் கண்டுபிடித்துள்ளது. இத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட கணினிசார் குற்றத் தடுப்பு விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகள் மூலம் 310 காவல் துறைப் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர். ஆட்கடத்தல் குற்றங்களைக் கட்டுப்படுத்த குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையின் காவல் துறை கூடுதல் இயக்குநர் ஒருங்கிணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டவுடன், அவ்வகைக் குற்றங்கள் தொடர்பாகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, கூடுதல் கவனம் செலுத்துவதற்காக 14 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டன. பல்வேறு மாவட்டங்களில் ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவுகளை அமைத்து, அங்குப் பணிபுரியும் காவல் அலுவலர்களுக்கு ஆட்கடத்தல் குற்றங்களைத் தடுப்பதற்கான பயிற்சி வகுப்புகள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், ஒரு சிறுவனைக் கடத்தி, அவனுக்குக் கட்டாய பாலின மாற்று அறுவை சிகிச்சை செய்து, பாலியியல் தொழிலில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்திய, மாநிலங்களுக்கிடையே செயல்படும் அரவாணிகள் கும்பல் ஒன்றை இத்துறை கண்டுபிடித்தது. பன்னாட்டுக் காவல் நிறுவனமான இண்டர்போல் சம்பந்தப்பட்ட விவகாரங்களைத் திறமையாகக் கையாண்டதோடு, குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்கு ஒன்றில் விசாரணைக்காக இந்தியாவிற்கு வருகை புரிந்த இங்கிலாந்து நாட்டு காவல் துறையினருக்கு உரிய உதவிகளையும் இத்துறையினர் செய்தனர்.

33. மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பில் குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை, தமிழகத்தின் சிறப்புக் காவல் முகமையாகச் செயல்பட்டு, அப்பணியைத் தன்னம்பிக்கையுடனும், உறுதியாகவும், சிறப்பாகச் செயல்படுத்தியது. இந்நோக்கத்திற்காக, சென்னையில், 2008 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25 ஆம் நாளன்று, தென் மாநில காவல் துறை இயக்குநர்களின் மாநாடு ஒன்றைக் குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினர் ஏற்பாடு செய்திருந்தனர். காவல் பணியின் பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்ட பின்னர், மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் பொருட்டு, இத்தகைய உயர்மட்ட மாநாடுகளில் முக்கியமான பரிந்துரைகள் செய்யப்பட்டன. தென் மாநில உளவுப் பிரிவு தலைமை அதிகாரிகளின் ஆண்டுக்

2010 மே 7]

கூட்டத்தை நடத்துவது என்பதும் அம்மாநாட்டின் பரிந்துரைகளில் ஒன்றாகும். அந்த வகையில், முதல் ஆண்டு மாநாடு, 2009 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 30 ஆம் தேதியன்று, பெங்களூருவில் நடைபெற்றது. இந்த முன்னோடியான நடவடிக்கையின்பால் ஈர்க்கப்பட்டு, இதே போன்றதொரு மாநாட்டை, திருவனந்தபுரத்தில், 2009 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 4 ஆம் நாளன்று, கேரள மாநில காவல் துறையும் நடத்தியது.

குற்றப் பிரிவு

34. காவல் துறை கூடுதல் இயக்குநர் தலைமையிலான குற்றப் பிரிவில் செயல்படும் அமைப்புகள்:

i) சிறப்புப் புலனாய்வுப் பிரிவு:—மத அடிப்படைவாதிகள் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் தீவிர புலன் விசாரணை செய்வதற்கும், குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் பெற்றுத் தருவதற்கும், குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில், சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டு, இப்பிரிவுகள், குற்றப் பிரிவு (சிறப்புப் புலனாய்வுப் பிரிவு) காவல் துறைத் தலைவரின் மேற்பார்வையிலும், கூடுதல் காவல் துறை இயக்குநரின் ஒட்டுமொத்த மேற்பார்வையிலும் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரிவும், காவல் ஆய்வாளரின் தலைமையில் செயல்படுகிறது. கோவை குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கு, இமாம் அலி தப்பி ஓடிய வழக்கு, இஸ்லாமிய பாதுகாப்புப் படை தொடர்பான வழக்கு உள்ளிட்ட நிலுவையில் இருந்த அனைத்து வழக்குகளையும், இப்பிரிவு விசாரணை நடத்தி முடித்தது.

ii) போதைப் பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவு:—காவல் துறைக் கண்காணிப்பாளரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வரும் இப்பிரிவில், 1 காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர், 12 காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 சார்பு ஆய்வாளர்கள், 126 காவலர்கள் ஆகியோர் பணிபுரிகின்றனர். ஒவ்வொரு போதைப் பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவுக்கும் அதிகார வரம்பு 1 முதல் 4 மாவட்டங்களாகும். ஒவ்வொரு பிரிவும் ஒரு காவல் ஆய்வாளரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றது. மாநில போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, கூடுதல் காவல் இயக்குநரின்

[2010 மே 7

ஒட்டுமொத்தக் கண்காணிப்பின்கீழ் செயல்பட்டு வருகின்றது. கூடுதல் காவல் இயக்குநருக்கு உதவியாகக் காவல் துறைத் தலைவர், குற்றப் பிரிவு (சிறப்புப் புலனாய்வுப் பிரிவு) மற்றும் காவல் துறைத் துணைத் தலைவர், குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை (சிறப்புப் புலனாய்வுப் பிரிவு) ஆகியோர் பணிபுரிகின்றனர். 2009 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிலுள்ள போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு 1,667 குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட 1,655 வழக்குகளைக் கண்டுபிடித்து, மொத்தம் ரூ.3.91 கோடி மதிப்புள்ள 2,040.050 கிலோ கிராம் உலர் கஞ்சா, 1 கிலோ ஹெராயின், 2.550 கிலோ கிராம் ஓபியம், 500 கிராம் செராஸ், 7,429.600 கிலோ கிராம் கஞ்சா செடிகள் ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளது. 2009 ஆம் ஆண்டில், 24 குற்றவாளிகள், தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு போதைப்பொருள் குற்றவாளிகள் சட்டத்தின் (14/1982) கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

iii) வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு:– இப்பிரிவு, காவல் துறை கண்காணிப்பாளரின் தலைமையில், 1 காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர், 6 ஆய்வாளர்கள், 2 சார்பு ஆய்வாளர்கள், 16 காவல் பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றது. ஆரம்பகாலத்தில், சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 பிரிவுகளுடன் செயல்படத் தொடங்கியது. நுண்ணறிவு தகவல்களைச் சேகரிப்பதிலும், குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தருவதிலும், ஏற்பட்ட கூடுதலான பணிச்சுமையை ஈடு செய்யும் வகையில் 6-1-2005 அன்று, மேலும் 6 பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, ஓர் ஆய்வாளரின்கீழ் ஒவ்வொன்றும் செயல்பட்டு வருகிறது. தற்போது செயல்பட்டு வரும் பிரிவுகளும் வலுப்படுத்தப்பட்டது. மேலும், சென்னை-II, வேலூர், புனித தோமையார் மலை, கடலூர், விருதுநகர், திண்டுக்கல் ஆகிய இடங்களில் 6 புதிய பிரிவுகள் அமைக்கப்பட்டன. காவல் துறைத் துணைத் தலைவர், குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை (சிறப்பு புலனாய்வுப் பிரிவு), காவல் துறை தலைவர், குற்றப் பிரிவு (சிறப்பு புலனாய்வுப் பிரிவு) மற்றும் கூடுதல் காவல் துறை இயக்குநர், குற்றப் பிரிவு, சென்னை ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் இப்பிரிவு செயல்பட்டு வருகின்றது.

2009 ஆம் ஆண்டில், ஒலி, ஒளி குறுந்தகடுகள் பறிமுதல் செய்தல், கேபிள் டிவி இயக்குபவர்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளின்

2010 மே 7]

கீழான குற்றங்கள் தொடர்பாக, மொத்தமாக 2,204 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

iv) கூட்டுக்கொள்ளை தடுப்புப் பிரிவு:– இப்பிரிவுக்கு, காவல் துறை கண்காணிப்பாளர் தலைமை வகிக்கிறார். இப்பிரிவானது, காவல் துறை கூடுதல் இயக்குநர், குற்றப்பிரிவு, சென்னை அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. மாவட்டங்களிடையே செயல்பட்டு வரும் கூட்டுக்கொள்ளை குற்றவாளிகள் மற்றும் அவர்களது நடவடிக்கைகள் குறித்து, இப்பிரிவு தகவல்களைச் சேகரிக்கிறது. தமிழக அரசு, உயர் நீதிமன்றம் மற்றும் காவல் துறைத் தலைமை இயக்குநர் பரிந்துரைக்கும் முக்கியமான வழக்குகளையும் புலன் விசாரணை செய்து வருகிறது.

பொருளாதாரக் குற்றப் பிரிவு

35. வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு, சிலை திருட்டு தடுப்புப் பிரிவு மற்றும் பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு-II (பொ.கு.த.பி-II நிதி நிறுவனங்கள்) ஆகியவை அடங்கிய இப்பிரிவிற்குக் கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமை வகிக்கிறார். அவருக்கு உதவியாக இரு காவல் துறை தலைவர்களும், ஒரு காவல் துறை துணைத் தலைவரும், மூன்று காவல் துறை கண்காணிப்பாளர்களும் பணியாற்றுகின்றனர்.

i) வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு

கூட்டுறவுச் சங்கங்களில் நிதி கையாடல் தொடர்பான குற்றங்களைப் புலன் விசாரணை செய்வதற்காக 1971 ஆம் ஆண்டில், வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. தற்போது இப்பிரிவு 15 கூட்டுறவு சங்கங்களில் குற்றச் செயல்கள் குறித்து புலன் விசாரணை நடத்தி வருகிறது.

•

2009 ஆம் ஆண்டில், 143 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. பழைய வழக்குகள் உட்பட 135 வழக்குகளில் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் பல்வேறு நீதிமன்றங்கள் 88 வழக்குகளை விசாரித்து முடிவு செய்தன. இவற்றில் 75 வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டது. தண்டனை அளிக்கப்பட்டது 85% ஆகும். பிணையில் வெளிவர முடியாத 88 பிடியாணைகளில், 85 பிடியாணைகள் சார்வு செய்யப்பட்டுள்ளன. இப்பிரிவில், தமிழ்நாடு முழுவதும் 56

[2010 மே 7

வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன. மேலும், 1,285 வழக்குகள் நீதிமன்ற விசாரணைக்காக நிலுவையில் உள்ளன.

2009 ஆம் ஆண்டில், கூட்டுறவுத் துறைக்கு வரவேண்டிய மிகப்பெரிய தண்டனைக் கட்டணத் தொகையான ரூ.4,30,43,129.71-ஐ வசூலிக்க இப்பிரிவு பெரிதும் உதவியாக இருந்து பணியாற்றியுள்ளது. குற்றவாளிகளிடமிருந்து அபராதத் தொகையாக ரூ.2,66,000/- வசூல் செய்யப்பட்டுள்ளது.

ii) சிலை திருட்டு தடுப்புப் பிரிவு

சிலை திருட்டு தடுப்புப் பிரிவானது 1983 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. (1) தொன்மை வாய்ந்ததாக அறிவிக்கப்பட்ட சிலைகள் திருட்டு, (2) 100 ஆண்டுகளுக்கும் மேலாகப் பழமைவாய்ந்த சிலைகள் திருட்டு, (3) மாநில அளவில் அல்லது மாநிலங்களுக்கிடையே தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான சிலைகள் திருட்டு, (4) ரூ.5 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மதிப்புள்ள சிலைகள் திருட்டு, (5) சிறப்பம்சம் நிறைந்த, மாநில அரசால் புலன் விசாரணைக்கு உகந்தது என கருதப்படும் சிலைகள் திருட்டு போன்ற வழக்குகளில் புலன் விசாரணை நடத்த இப்பிரிவு உருவாக்கப்பட்டது.

இப்பிரிவு அதனிடம் தெரிவிக்கப்பட்ட வழக்குகளைப் புலன் விசாரணை செய்து கண்டுபிடிக்கும் பணிகள் மட்டுமின்றி, தமிழ்நாடு முழுவதும் உள்ளூர் காவல் நிலையங்களில் பதிவாகும் சிலை திருட்டு குறித்த வழக்குகளையும் கண்காணித்து வருகிறது. சிலை திருட்டு சம்பந்தப்பட்ட குற்ற வழக்குகளைக் கண்டுபிடிக்க, மாவட்ட காவல் துறைக்கு உரிய தகவல்களையும், பயனுள்ள அறிவுறுத்தல்களையும் வழங்குவதைத் தவிர, கோயில் பாதுகாப்புப் படையின் செயல்பாடு குறித்தும், இப்பிரிவு கண்காணித்து வருகிறது.

2009 ஆம் ஆண்டில் இப்பிரிவு, சிலை திருட்டு சம்பந்தமான 12 வழக்குகளைக் கண்டுபிடித்துள்ளது. இவ்வழக்குகளில், 35 பயங்கரக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து ரூ.58.50 கோடி மதிப்புள்ள தொன்மை வாய்ந்த 32 சிலைகள் மீட்கப்பட்டன. இதுதவிர, விலைமதிப்பற்ற இரண்டு மரகதலிங்கங்களும் மீட்கப்பட்டன. அமெரிக்காவுக்கும், ஹாங்காங்குக்கும் தொன்மைவாய்ந்த கலைநயமிக்க சிலைகளைக்

2010 மே 7]

கடத்திய பயங்கரக் குற்றவாளியான சஞ்சீவ் அசோகன் மற்றும் அவனது இரண்டு கூட்டாளிகள் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

iii) பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு – II (பொ.கு.த.– II நிதி நிறுவனங்கள்)

1-1-2000 முதல் பொருளாதார குற்றத் தடுப்புப் பிரிவு-II (நிதி நிறுவனங்கள்), செயல்பட்டு வருகின்றது. சென்னையைச் சார்ந்த "அனுபவ் பிளாண்டேசன்ஸ் லிமிடெட்" நிறுவனத்தின் மனு எண்கள் 479 மற்றும் 480/1999 மீது, சென்னை உயர் நீதிமன்றம், 29-9-1999 அன்று பொதுமக்களிடமிருந்து வைப்பீடுகளாக பெறும் பணத்தை அவர்களிடம் திருப்பி வழங்க தவறும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டாண்மையற்ற நிதி நிறுவனங்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்படும் வழக்குகளை புலன் விசாரணை செய்ய, நெருக்கடி நிலைகளைச் சமாளிக்கும் வகையில், திறனும் தகுதியும் பெற்ற பணியாளர்களைக் கொண்ட ஒரு சிறப்புப் பிரிவு சென்னை மாநகர காவல் துறை ஆணையாளர் பதவித்தரத்திற்குக் குறையாத காவல் துறை அதிகாரியின் தலைமையில் அமைக்கப்பட வேண்டுமென உத்தரவிட்டது. இந்தத் தீர்ப்பிற்கிணங்க இப்பிரிவு உருவாக்கப்பட்டது.

முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரக் குற்றங்கள் சம்பந்தப்பட்ட வேறு வழக்குகளிலும் இப்பிரிவு புலன் விசாரணை மேற்கொண்டு வருகிறது. கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவித் தரத்திலுள்ள ஓர் அதிகாரியின் தலைமையில் 383 பணியாளர்களுடன் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள இப்பிரிவுக்கு, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், வேலூர், திருச்சி, சேலம், நாமக்கல், ஈரோடு, கோயம்புத்தூர், கரூர், மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 15 இடங்களில் களப்பணிப் பிரிவுகள் உள்ளன. காவல் துறைத் தலைவர் ஒருவரும், காவல் துறை கண்காணிப்பாளர் இருவரும், சார்நிலைப் பணியாளர்களின் பணிகளை மேற்பார்வையிடுகின்றனர். 2009 ஆம் ஆண்டில், 1,88,922 வைப்பீட்டுதாரர்களுக்கு ரூ.73.42 கோடி திரும்ப பெற்றுத் தரப்பட்டது. குறுகிய காலத்தில் அரசாணைகள் பெறப்பட்டு ரூ.32.95 கோடி மதிப்புள்ள சொத்துகள் ஜப்தி

[2010 மே 7

செய்யப்பட்டது ஒரு மிகப் பெரிய சாதனையாகும். இவ்வாணைகளின் மூலம் மேற்படி சொத்துகளை ஏலத்தில்விட்டு பணத்தை வைப்பீட்டுதாரர்களுக்கு உரிய அதிகாரி/ கோட்டாட்சியர்களால் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குற்றம் மற்றும் குற்றவியல் சார்ந்த கணினி தொழில்நுட்ப இணைப்புத் திட்டம் (CCTNS)

36. இந்திய அரசு, பதினோராம் ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சிய மூன்றாண்டுக் காலத்தில் (2009-2012) தேசிய மிஷன் மோடு திட்டத்தின்கீழ், தேசிய மின் ஆளுமை மூலம் நாட்டில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்கள் மற்றும் காவல் அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட குற்றம் மற்றும் குற்றவாளிகள் விவரத் தொகுப்பினை ஒருங்கிணைப்பதற்கான 100% மத்திய நிதி உதவியுடனான கணினி தொழில்நுட்ப இணைப்புத் திட்டம் (CCTNS) எனும் திட்டத்தை அறிவித்துள்ளது. தமிழகத்தில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசுடன் 10-12-2009 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த காவல் துறைத் தலைவர், மாநில குற்ற ஆவணக் காப்பகம் (Inspector General of Police, SCRB) முகமை அலுவலராக (Nodal Officer) நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய மாநில திட்ட மேலாண்மை நிறுவனமாக (SPMC) தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மற்றும் மத்திய அரசின் நிதி உதவியினைப் பெற மாநில முகமை நிறுவனமாக (State Nodal Agency) தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகமும் நியமனம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை 2009-2010-ல் செயல்படுத்த மத்திய அரசு தற்போது ரூ.463.40 இலட்சம் (நானூற்று அறுபத்து மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) விடுவித்து, மேற்படி தொகையில் ஆளுமைப் பணி பயிற்சியினை மாவட்டத் தலைமையகங்களில் உள்ள 40 பயிற்சி மையங்கள் வழியாகச் செயல்படுத்த கணினி கொள்முதல் மற்றும் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தில் உருவாக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ள மென்பொருளான "குற்றப் பகுப்பாய்வு மற்றும் தானியங்கி கணினி திட்ட முறை" (CAARUS) யினை குற்றம் மற்றும் குற்றவியல் சார்ந்த கணினி தொழில்நுட்ப இணைப்புத் திட்டத்தின்கீழ் (CCTNS) நடைமுறைப்படுத்துவதும் அரசின் பரிசிலனையில் உள்ளது.

2010 மே 7]

மாநில குற்ற ஆவணக் காப்பகம்

37. இப்பிரிவிற்குக் காவல் துறை கூடுதல் இயக்குநர் ஒருவர் இயக்குநராக உள்ளார். காவல் துறைத் தலைவர் ஒருவர் உதவிகரமாக உள்ளார். அனைத்துக் குற்றங்கள் தொடர்பான தகவல்களை வழங்கும் மையமாக விளங்கும் இக்குற்ற ஆவணக் காப்பகம், குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, சரிபார்த்து, பகுப்பாய்வு செய்கிறது. இப்பிரிவில், காவல் துறை கணினிப் பிரிவு, ஒற்று இலக்கமுறை விரல் ரேகைப் பதிவுக்கூடம், புள்ளியியல் பிரிவு, குற்றம் செய்யும் முறையைக் கண்டுபிடிக்கும் பிரிவு ஆகியவை செயல்படுகின்றன. குற்றம் மற்றும் குற்றவாளிகள் சார்ந்த தகவல் முறை (சிசிஐஎஸ்), ஒருங்கிணைந்த காவல் பொது செயல்பாட்டு முறை (சிஏபிஏ) போன்றவற்றைச் செயல்படுத்தி, இப்பிரிவு தேசிய குற்ற ஆவணக் காப்பகத்திற்குத் தகவல்களை அளித்து வருகிறது. மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம் குற்ற ஆய்வு என்ற பத்திரிகையை வெளியிட்டு வருகிறது. இதில் முக்கிய வழக்குகள், ஆற்றியுள்ள சீரிய பணிகள் ஆகியவை வெளியிடப்பட்டு வருகின்றன. இதுதவிர, ஆண்டுவாரி குற்ற ஆய்வுப் புத்தகத்தையும் இப்பிரிவு வெளியிடுகிறது.

செயல்பாடுகள்

38. 1997 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு அதிரடிப்படை மற்றும் தமிழநாடு அதிரடிப்படை பயிற்சிப் பள்ளி காவல் துறைத் தலைவரின்கீழ் செயல்பட்டு வருகிறது.

i) தமிழ்நாடு அதிரடிப்படை

தமிழ்நாடு அதிரடிப்படையானது தடா, பொடா தொடர்புடைய முக்கிய வழக்குகளில் குற்றவாளிகளுக்கு வழிக்காவல் பணி மேற்கொள்ளவும், மிக முக்கிய நபர்களுக்கும், முக்கியச் சம்பவங்களின்போதும் பாதுகாப்பு அளிப்பதற்காகவும் உருவாக்கப்பட்டது. இவற்றைத் தவிர சட்டம் ஒழுங்கு, மீட்புப் பணி, வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்தல், தேர்தல் காலப் பணிகள் போன்ற பல்வேறு பணிகளையும் இப்படை மேற்கொள்கிறது.

ii) தமிழ்நாடு அதிரடிப்படை பயிற்சிப் பள்ளி

இப்பள்ளியில் அதிரடிப் படையினருக்கு நவீன ஆயுதங்களைக் கையாளுவதற்கும், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச்

[2010 மே 7

செயலிழக்கச் செய்யும் தொழில்நுட்பங்கள் குறித்தும் உரிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மறைந்து நின்று துப்பாக்கிச் சுடுதல், வனப் பகுதியில் தங்கியிருத்தல், ஆயுதங்களைக் கையாளுதல், நாசவேலைகளுக்கு எதிரான செயல்பாடுகள் ஆகிய முக்கியப் பணிகளைக் கையாளும் திறமைகளை வளர்த்துக்கொள்ள இப்பள்ளியில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதர துறைகளான சிறைத் துறையினர், மத்திய ஆயத் துறையினர், இதர மாநிலங்களின் காவல் துறையினர் ஆகியோருக்கும் இப்பள்ளி சிறப்புப் பயிற்சி அளிக்கிறது.

இப்பயிற்சிகளைத் தவிர, தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாநகரத்திலும் அவசர நிலைமைகளைச் சமாளிக்க தீவிரவாதத் தடுப்பு அதிரடிப்படை என்னும் சிறு குழுக்கள் அமைப்பதற்கும், முக்கிய நகரங்களில் சிறப்புக் குழுக்களை உருவாக்குவதற்கும், முதற்கட்டமாகத் தீவிரவாதிகளை எதிர்க்கும் பணியில் பயிற்சி பெற்ற தமிழ்நாடு அதிரடிப்படை பயிற்சிப் பள்ளியைச் சார்ந்த நான்கு குழுக்கள், ஒவ்வொரு குழுவும் ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் 7 இதர பணியாளர்கள் இப்பிரிவிற்காக மாவட்டம் அல்லது மாநகரத்திலிருந்து 4 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 28 காவல் பணியாளர்கள் என்ற வீதத்தில் அதிகாரிகளுக்கும்/பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக மதுரை, திருச்சி, கோவை, சென்னை (பள்ளிப்பட்டு) ஆகிய இடங்களிலுள்ள நான்கு மண்டல நிலை பயிற்சி மையங்களைப் பார்வையிட்டு வந்துள்ளது. மொத்தத்தில் 23-2-2009 முதல் 27-02-2009 வரை நான்கு மண்டலங்களிலும், 260 காவல் துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு (ஒரு ஆய்வாளர், 106 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 828 இதர காவல் பணியாளர்கள்) பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

iii) வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படை

திறமையான நிபுணர்களைக் கொண்டு தமிழ்நாடு அதிரடிப்படை பயிற்சிப் பள்ளியின் சிறப்புப் பிரிவாகச் செயல்படும் இப்படையானது, வெடிகுண்டுகளையும், வெடிமருந்துப் பொருட்களையும் அவ்வப்போது கண்டுபிடித்து, அவற்றை விரைந்து செயலிழக்கச் செய்து வருகிறது.

சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய ஆறு மாநகரங்கள், பாதுகாப்பு சென்னை காவல்

2010 மே 7]

மற்றும் பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை ஆகியவற்றிற்காக வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் படையில் (மொத்தத்தில் 10 ஆய்வாளர்கள், 28 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 80 தலைமைக் காவலர்கள்) முன்னாள் இராணுவ வீரர்களை நியமனம் செய்யலாம் என அரசு உத்தரவிட்டுள்ளது. இதுவரையில், 10 ஆய்வாளர்கள், 9 உதவி ஆய்வாளர்கள், 38 தலைமைக் காவலர்கள் பதவியில் முன்னாள் இராணுவ வீரர்கள் எழுத்துத் தேர்வு மற்றும் இத்துறை நிபுணர்களின் வாய்மொழித் தேர்வுமூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள பணியிடங்கள் 2010 ஆம் ஆண்டில் நிரப்பப்படும்.

நுண்ணறிவுப் பிரிவு

39. மாநில நுண்ணறிவுப் பிரிவானது, பாதுகாப்பு, பொது அமைதி, பொது முக்கியத்துவம் வாய்ந்தவற்றிற்கு ஊறுவிளைவிக்கும் தகவல்களைச் சேகரித்து, ஒருங்கிணைத்து, அத்தகைய தகவல்களை உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட பிரிவுக்கு அனுப்பும் பணியை ஆற்றி வருகிறது. இப்பிரிவின்கீழ், தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, க்யூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சிறப்புப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு ஆகியவை உள்ளன. கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையின்கீழ், இரண்டு காவல் துறைத் தலைவர்கள், ஒரு காவல் துறைத் துணைத் தலைவர் மற்றும் ஐந்து காவல் துறை கண்காணிப்பாளர்களுடன், தலைமையிடத்திலும், மாநில அலகுகளிலும், இதர அலுவலர்களின் உதவியுடன் செயல்பட்டு வருகிறது. நுண்ணறிவுப் பிரிவிற்கு காவல் துறை தலைவர் ஒருவர் தலைமை வகிக்கிறார்.

i) தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

இப்பிரிவானது, வெளிப்படையான மற்றும் இரகசியமான அரசியல் நடவடிக்கைகள் மற்றும் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய, பல்வேறு சாதி, மதங்களைச் சார்ந்த மக்களிடையே கசப்புணர்வு மற்றும் மத நல்லிணக்கத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடிய தனி நபர்கள் மற்றும் அமைப்புகளின் நடவடிக்கைகள் குறித்து நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்தல், தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள், தொழிற்சங்கங்கள், ஊழியர் சங்கங்கள் போன்ற அமைப்புசார்ந்த

மற்றும் அமைப்புசாரா துறைகளின் நடவடிக்கைகள், பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய வதந்திகள், செய்திகள், கடிதங்கள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றின் விநியோகத்தைக் கண்காணித்தல், அத்தியாவசியப் பணிகள் மற்றும் அரசியல், சமூகம், வகுப்புவாதம், இதர முக்கியத்துவம் வாய்ந்த பிரிவுகள் ஆகியன குறித்து நிலவும் பரவலான கருத்துகளைக் கூராய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அத்தகைய தகவல்களைச் சேகரித்து, ஒருங்கிணைத்து, மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அனைத்து நிலைகளிலும் மேற்கொள்வதற்கு ஏதுவாக உரிய அதிகாரிகளுக்கு அனுப்பும் பணியையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

ii) ''க்யூ'' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

நக்சலைட்டுகளின் அச்சுறுத்தல்களை எதிர் கொள்வதற்கென மாநில நுண்ணறிவுப் பிரிவில், தனியாக ஒரு பிரிவு 1971 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

1993 ஆம் ஆண்டு, மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களில் செயல்பட்டு வந்த "க்யூ" பிரிவானது, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி, புலன் விசாரணைகளை மேற்கொள்ளத் தேவையான அதிகாரங்களுடன் அவை காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டன. இடதுசாரி தீவிரவாதிகள், குறிப்பாக இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மாவோயிஸ்ட்), இலங்கை தமிழ்ப் போராளிகள் ஆகியோர் குறித்த தகவல்களைச் சேகரிப்பதுடன், அத்தகையோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் பணியையும் இப்பிரிவு மேற்கொள்கிறது. இலங்கை அகதிகள் வருகை மற்றும் முகாம்கள் மற்றும் அகதிகளுக்கான குடியிருப்புகளில் உள்ள இலங்கை அகதிகளின் நடவடிக்கைகளை இப்பிரிவு கண்காணித்து வருகிறது. கடலோரப் பகுதிகளில், கடத்தல் சம்பவங்களுக்கு எதிராகவும் இப்பிரிவு நடவடிக்கை எடுத்து வருகிறது.

iii) சிறப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

கோவை தொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து (1998), மாநில குற்றப் புலனாய்வுத் துறையின்கீழ் சிறப்புப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது. இப்பிரிவானது, மத அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாத அமைப்புகள், மத ரீதியிலான பிரச்சார மையங்கள்,

2010 மே 7]

வெளிநாட்டிலிருந்து வரும் நிதி குறித்து தகவல் சேகரித்து, உள்ளூர் காவல் நிலைய நடவடிக்கைக்காக அனுப்பும் பணியை மேற்கொள்கிறது. தடை செய்யப்பட்ட வகுப்புவாத அமைப்புகளான, அல்-உம்மா, அனைத்திந்திய ஜிகாத் கமிட்டி, இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம், இதர தடை செய்யப்பட்ட புரட்சிகர இயக்கங்கள் மற்றும் அடிப்படைவாத அமைப்புகளின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணித்து வருகிறது.

iv) பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

இப்பிரிவானது, தமிழ்நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டுத் தலைவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த முக்கிய நபர்கள், மிக முக்கிய நபர்கள், பாதுகாக்கப்பட வேண்டிய நபர்கள் உள்ளிட்டோருக்கு பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவை தவிர, வெளிநாட்டவரின் நடவடிக்கைகள், முக்கிய நிறுமானங்கள் இருக்கும் அமைப்புகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல், கடவுச் சீட்டுகள் மற்றும் குடியுரிமை விண்ணப்பங்கள் உள்ளிட்ட குடியேறல் தொடர்பான ஆவணங்களைச் சரி பார்த்தல் போன்ற பணிகளையும் இப்பிரிவு மேற்கொள்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் சிறப்புப் பாதுகாப்புப் பிரிவு ஒன்று 1997 ஆம் ஆண்டில் தனியாக உருவாக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் கலந்து கொள்ளும் விழாக்கள், கூட்டங்கள் மற்றும் பயணங்களின்போது தொடர்ந்து உச்சகட்டப் பாதுகாப்பினை இப்பிரிவு வழங்கி வருகிறது. இப்பிரிவின்கீழ், அதிரடிப்படை, வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படை, வாகனப் போக்குவரத்துப் பிரிவு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு ஆகியன செயல்பட்டு வருகின்றன.

2009 ஆம் ஆண்டில், அதிமுக்கிய நபர்கள், முக்கிய நபர்கள் மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய நபர்கள் ஆகியோர் வருகையின்போது, 2,057 நிகழ்வுகளில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பிரிவானது, தமிழ்நாட்டைச் சேர்ந்த பாதுகாக்கப்பட வேண்டிய 160 நபர்களுக்கும், முக்கிய நபர்களுக்கும் பாதுகாப்பு வழங்கி வருகிறது.

[2010 மே 7

v) காவல் சுருக்கெழுத்துக் கூடம்

அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஆணையரகங்களில் அலகுகளைக் கொண்டுள்ள காவல் சுருக்கெழுத்துக் கூடமானது, பொதுக்கூட்டங்கள் மற்றும் பேச்சாளர்களின் உரைகளைக் குறிப்பெடுக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மாநில குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை, க்யூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சிறப்புப் பிரிவு போன்ற பிரிவுகள் சம்பந்தப்பட்ட வழக்கு ஆவணங்களையும், தமிழக சட்டப் பேரவை மற்றும் பொது (அதிமந்தணம்) துறை சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மொழிபெயர்க்கும் பணியினையும் காவல் சுருக்கெழுத்துக் கூடம் மேற்கொண்டு வருகிறது.

தொழில்நுட்பப் பிரிவு

40. காவல் தொலைத் தொடர்பு பிரிவானது தமிழ்நாடு காவல் துறையில் தனித்தன்மை வாய்ந்த பிரிவாகும். காவல் துறையின் தொலைத் தொடர்பு கட்டமைப்புகளை இத்தொழில்நுட்பச் சேவைப் பிரிவு பராமரித்து வருகிறது. இவ்வலகிற்கு காவல் துறை தலைவர் தலைமை வகிக்கிறார். இவருக்கு உதவியாக ஒரு காவல் துறை துணைத் தலைவர் மற்றும் ஒரு காவல் கண்காணிப்பாளர் (தொழில்நுட்பம்) ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

41. தற்போது, தமிழகத்தில் உள்ள 31 மாவட்டங்கள் மற்றும் 6 ஆணையரகங்களில், காவல் நிலையங்களுக்கிடையே தடையில்லா தகவல் பரிமாற்றத்திற்கென மிக உயர் அலை தொலை தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட/மாநகர தகவல் பரிமாற்ற சேவைக்கென 91 மறு அஞ்சல் நிலைகளிலிருந்து 130 மிக உயர்வலை தொலைத் தொடர்புகள் செயல்பட்டு வருகின்றன. அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் நுண்ணலை தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. சிறப்புக் காவல் அணிகளில் உயர்வலை ஒலித் தொடர்பு வசதி பயன்பாட்டில் உள்ளது. பின்வரும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு செயல்பாட்டில் உள்ளன:

மாவட்டங்களில் மிக உயர்வலை தொலைத் தொடர்பு வசதியில்லாத திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி, சேலம் மாவட்டத்திலுள்ள வடசென்னிமலை, தம்மம்பட்டி, தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி, அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம், திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை,

2010 மே 7]

தேனி மாவட்டம் பாக்கியம் தொழிற்பேட்டை, தூத்துக்குடி மாவட்டம் நாசரேத், கன்னியாகுமரி மாவட்டம் மத்தியாஸ் நகர் ஆகிய இடங்களில் மிக உயர்வலை தொலைத் தொடர்பு மறு அஞ்சல் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகளின் காரணமாக, அம்மாவட்டங்களில் தொடர் தொலைபேசிச் சேவை, வாக்கி டாக்கி தகவல் பரிமாற்றம் ஆகியவை குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டுள்ளன.

- கோவை மாநகரில், பி.ஏஸ்.என்.எல். நிறுவனத்தின் 90 மீட்டர் கோபுரத்தைப் பயன்படுத்தி மறு அஞ்சல் கருவிகள் பொருத்தப்பட்டதன் விளைவாக, மிக உயர்வலை தொலைத் தொடர்பு கிடைக்காத இடங்களில், இச்சேவை மேம்படுத்தப்பட்டுள்ளது.

- CAARUS பதிவேற்றம் செய்யும் மென்பொருள் அனைத்துக் காவல் நிலையங்களிலும் நிறுவப்பட்டு, வழக்கு விவரங்கள் அதில் பதிவு செய்யப்படுவதன் வாயிலாக, தலைமையகத்திலிருந்தே அன்றாட நிலவர அறிக்கையைப் பெற முடிகிறது.

- தூத்துக்குடி-திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில், தருமபுரி-கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு 5.8 Ghz இலக்கமுறை நுண்ணலை தொலைத் தொடர்பு சேவை விரிவாக்கம் செய்யும் திட்டம் நிறைவேற்றப்பட்டு, காவல் துறையின் பயன்பாட்டில் உள்ளது.

- சென்னையிலிருந்து கொடைக்கானலுக்கான இலக்கமுறை நுண்ணலை தொலைத் தொடர்பு சேவையை மாற்றியமைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு, துறையின் பயன்பாட்டில் உள்ளது.

- 60 அடி உயரத்தில் 258 பின்னல்வலை தூண்கள் (Lattice masts) அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

- தொழில்நுட்பப் பிரிவு பண்டகசாலையில் உள்ள பொருட்கள் பரிமாற்றத்தைக் கணினிமயமாக்கும் பொருட்டு, தொழில்நுட்பப் பிரிவு பண்டகசாலை பொருள் பட்டியல் மேலாண்மை முறைக்கான மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

[2010 மே 7

- அரசு ஒப்பளித்துள்ள 2000 அகண்ட அலைவரிசை இணைப்புகளில், 1,899 இணைப்புகள் பி.எஸ்.என்.எல்.மூலமாக வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இணையதளம் பொதுப் பயன்பாட்டிற்கும், துறைக்குள் விரிபரப்பு இணைய திட்டத்தின் குறிப்பிட்ட பயன்பாட்டிற்கும் உதவுகிறது.

- துறையின் விரிபரப்பு இணைய திட்டத்தில் தரவு பாதுகாப்பை உறுதிபடுத்த, காவல் துறைத் தலைமையகத்தில் வழிசெயலி (Router) மற்றும் கணினி அரணுடனும் (firewall) கூடிய 4 Mbps குத்தகை இணைப்பு (leased line) நிறுவப்பட்டுள்ளது.

- சென்னை காவல் துறைத் தலைமையகத்தில் உள்ள நவீன கட்டுப்பாட்டு அறைக்கு உபகரணங்கள் கொள்முதல் செய்து, நிறுவுவதற்கென ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது.

- புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள 171 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்களுக்கான பாடத்திட்டம் மற்றும் பயிற்சிக்குரிய கால அட்டவணை தயாரிக்கப்பட்டு காவல் உயர் பயிற்சியகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- மன்னார்குடி, நாங்குனேரி ஆகிய இடங்களிலும், கன்னியாகுமரி காவல் துணைக் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்திலும் புதிய மறு அஞ்சல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சிறப்பு அதிரடிப் படை

42. இப்படைக்கு காவல் துறைத் தலைவர் தலைமை வகிக்கிறார். விமானக் கடத்தல் மற்றும் ஆயுதம் தாங்கிய போராட்டம், உள்நாட்டுக் கலகம், பயங்கரவாத நடவடிக்கைகள், மிக முக்கிய நபர்களைக் கடத்துதல் போன்றவற்றைத் தடுப்பதற்கான சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் இப்படையில் உள்ளனர். பெரிய அளவிலான இயற்கைச் சீற்றங்களின்போது, மீட்புப் பணிகளில் உள்ளூர் காவல் துறையினருக்கு இப்படையினர் உதவுகின்றனர். தற்சமயம், தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் இப்படையினர் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

43. தகுதிகாண் பருவ நிலையில் உள்ள இந்திய காவல் பணி அதிகாரிகள் மற்றும் ராயல்பூடான் காவல் பணி அதிகாரிகள்

2010 மே 7]

ஆகியோருக்குப் பின்வரும் பயிற்சிகள் ஒருவார காலத்திற்கு அளிக்கப்படுகின்றன:

i) அனிச்சைச் செயலில் துப்பாக்கி சுடுதல்

ii) அடர்ந்த வனப் பகுதியில் தங்கி பயிற்சி பெறுதல்

iii) ஆயுத யுக்தியைக் கையாளுதல், வனப் பகுதியில் போரிடும் முறை

சமூக நீதிப் பிரிவு

44. இப்பிரிவிற்குக் காவல் துறைத் தலைவர் ஒருவர் தலைமை வகிக்கிறார். அவருக்கு உதவியாக ஒரு காவல் துறை துணைத் தலைவரும் இப்பிரிவில் உள்ளார். 1955 ஆம் ஆண்டின் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1989 ஆம் ஆண்டின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகியவற்றை இப்பிரிவு செயல்படுத்தி வருகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான கொடுமைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் புனரமைத்தல் ஆகிய பணிகளையும் இப்பிரிவு செய்து வருகிறது. தமிழ்நாட்டில், 1974 ஆம் ஆண்டில் 6 நடமாடும் காவல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. பின்னர், இப்பிரிவுகள் மாவட்டத்திற்கு ஓர் அலகு என்ற விகிதத்தில் விரிவுபடுத்தப்பட்டு, தற்போது 29 மாவட்டங்களிலும், 6 காவல் ஆணையரகங்களிலும் 35 பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, கிராமப்புறங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு ஆராய்ச்சி நடத்துவதற்காக ஒரு சமூகவியலர் மற்றும் தலைமையகத்தில் ஒரு பொருளாதார நிபுணருடன் 31 புள்ளிவிவர ஆய்வாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

45. 2010 ஆம் ஆண்டில், 174 கிராமங்களில் வன்கொடுமைகள் நடைபெறக் கூடுமென அடையாளம் காணப்பட்டு, அங்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, நிலப் பயன்பாடு, திருவிழாக்கள் கொண்டாடுவது, பிற மதத்தினரிடையே திருமணம், பணப் பரிவர்த்தனை, தினக்கூலி வழங்குதல், வழிப்பாதைகளைப் பயன்படுத்துதல், சமூக, மத ரீதியில் பலவீனம் போன்றவை சம்பந்தப்பட்ட தகராறு காரணமாக இப்பிரச்சினைகள் எழுகின்றன

[2010 மே 7

என்று ஆய்வில் தெரிய வந்து, அது குறித்து தக்க தடுப்பு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் / உள்ளூர் காவல் துறையினர் / ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் ஆகியோருக்கு நுண்ணறிவுத் தகவல்கள் அளிக்கப்பட உள்ளன. குடிநீர், தெருவிளக்கு, இடுகாடு/ இடுகாடுகளுக்குச் செல்வதற்கான பாதை, இணைப்புச் சாலைகள், தொகுப்பு வீடுகள் கட்டுதல் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தருவது குறித்த தகவல்களையும் திரட்டி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரது குறைபாடுகளை நீக்குவதற்காக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்களுக்குத் தகவல் அனுப்பப்பட்டு வருகிறது.

46. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின்கீழ் 2009 ஆம் ஆண்டில் 1,264 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் இழைக்கப்படும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 732 வழக்குகளில், பாதிப்புக்குள்ளான 1,225 நபர்களுக்கு ரூ.1.47 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

காவல் பயிற்சிப் பிரிவு

47. காவல் உயர் பயிற்சியகம், காவல் பயிற்சிக் கல்லூரி, காவலர் தேர்வுப் பள்ளிகள், பணியிடைப் பயிற்சி மையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய காவல் பயிற்சிப் பிரிவுக்குக் காவல் துறை இயக்குநர் ஒருவர் தலைமை வகிக்கிறார். இவருக்கு உதவியாக இரு காவல் துறை கூடுதல் இயக்குநர்கள், இரு காவல் துறைத் தலைவர்கள், ஒரு காவல் துறைத் துணைத் தலைவர் மற்றும் மூன்று காவல் கண்காணிப்பாளர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

48. மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 13 பணியிடைப் பயிற்சி மையங்களில், பல்வேறு தொழிற்திறமை குறித்த தலைப்புகளில், மாவட்டங்களிலுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

49. 2009 ஆம் ஆண்டில், 1,654 குறுகிய காலப் பயிற்சிகளும், 240 முழுமையான புத்தாக்க வகுப்புகளும் நடத்தப்பட்டன. மொத்தமாக, 13,117 அதிகாரிகளும், 51,497 பணியாளர்களும் இந்த 13 பணியிடைப் பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்றனர்.

2010 மே 7]

50. 2009 ஆம் ஆண்டில், 51 வழக்கமான தலைப்புகளைத் தவிர, தேவை அடிப்படையில், 86 புதிய தலைப்புகள் தெரிந்தெடுக்கப்பட்டு, அத்தலைப்புகளிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. பணியிடைப் பயிற்சி மையங்களில் 2010 ஆம் ஆண்டுக்கான பயிற்சிகள் புதுப்பிக்கப்பட்டு, நிர்ணயப்படுத்தப்பட்டுள்ளன. 2006-2007 ஆம் ஆண்டில் புதிதாகப் பணியில் சேர்ந்த 1,327 காவலர்களுக்கு, ஏழு மாத கால அடிப்படை நிறுவனப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. (15-12-2008 முதல் 18-7-2009 வரை). 2007-2008 ஆம் ஆண்டில் புதிதாகப் பணியில் சேர்ந்த 5,608 காவலர்களுக்கு, நான்கு மாதகால அடிப்படை நிறுவனப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன (1-3-2009 முதல் 4-7-2009 வரை). 2007-2008 ஆம் ஆண்டில் புதிதாகப் பணியில் சேர்ந்த 546 காவலர்களுக்கு, 22 வாரகால அடிப்படை நிறுவனப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன (16-11-2009 முதல் 17-4-2010 வரை). 2008-2009 ஆம் ஆண்டில் புதிதாக பணியில் சேர்ந்த சுமார் 4,000 காவலர்களுக்கு 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அடிப்படை நிறுவனப் பயிற்சிகள் தொடங்கப்பட்டது. மொத்தமாக, 2008 ஆம் ஆண்டில் பணி நியமனம் செய்யப்பட்ட 3,753 காவலர்களுக்கும், 2009 ஆம் ஆண்டில் பணி நியமனம் செய்யப்பட்ட 6,935 காவலர்களுக்கும் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டது. அறிவியல் கோட்பாட்டின்படியும், விளையாட்டுத் துறையில் திறமைவாய்ந்த மருத்துவ பயிற்சியாளரின் ஆலேசானைப்படியும் காவலர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் உடற்பயிற்சியில் தக்க மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம்

51. 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், வண்டலூர் அருகிலுள்ள ஊனமாஞ்சேரியில் காவல் உயர் பயிற்சியகம் செயல்படத் தொடங்கியது. இந்த உயர் பயிற்சியகமானது, காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகளை அளிக்கிறது. முதற்கட்டமாக, 11-1-2009 அன்று, 715 உதவி ஆய்வாளர்கள் பயிற்சியை முடித்துள்ளனர். இது தவிர, 2009 ஆம் ஆண்டில் பின்வரும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

அ) 700 உதவி ஆய்வாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி, உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெறத் தகுதியுடைய தலைமைக் காவலர்களுக்கான பதவி உயர்வுக்கு முந்தைய

[2010 மே 7

பயிற்சி, 171 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

ஆ) "சாலைப் பாதுகாப்பு மற்றும் நகரப் போக்குவரத்து மேலாண்மை" என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசிய கருத்தரங்கம் 31-11-2009 அன்று நடத்தப்பட்டது. இந்தியா முழுவதிலுமிருந்து வந்திருந்த காவல் உயர் அதிகாரிகள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை

52. சென்னையிலுள்ள ஆயுத காவல் படையின் காவல் துறை கூடுதல் இயக்குநர் மற்றும் காவல் துறைத் தலைவர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் 15 சிறப்புக் காவல் அணிகள் (TSP) மற்றும் ரெஜிமண்டல் மையம் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பணியினை மேற்பார்வையிட சென்னை மற்றும் திருச்சியில் இரண்டு காவல் துறைத் துணைத் தலைவர் பதவிகளுக்கு ஏற்பளிக்கப்பட்டது. சென்னை, திருச்சி ஆகிய இடங்களில் இரண்டு காவல் போக்குவரத்துப் பணிமனைகள் ஏற்படுத்தப்பட்டு, அவை முறையே காவல் துறை துணைத் தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 8-வது அணியானது புது தில்லியிலுள்ள திகார் சிறைச்சாலையின் பாதுகாப்பிற்காக அயற்பணியில் ஈடுபட்டுள்ளது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையானது ஆயத்த நிலையில் உள்ள ஒரு படையாகும். ஆயுதப் படை மற்றும் உள்ளூர் காவலர்கள் தவிர, கூடுதலாகக் காவலர்கள் தேவைப்படும் சூழ்நிலை உருவாகும்போது, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரின் சேவைகள் பயன்படுத்தப்படுகின்றன. மிகப் பெரிய அளவில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள், முக்கிய கோயில் திருவிழாக்கள், இயற்கைப் பேரிடர்கள் மற்றும் அரசியல் பேரணிகள் ஆகிய நிகழ்வுகளின்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன. அது மட்டுமல்லாமல், சிறப்பு அதிரடிப் படை, கடலோரப் பாதுகாப்புப் பிரிவு, சிறைச்சாலைப் பணிகள், சிறப்பு அகதி முகாம்கள், முக்கிய நிறுமானங்களுக்கு பாதுகாப்பு அளித்தல், காவல் துறைத் தலைமை அலுவலகப் பாதுகாப்புப் பணி போன்றவற்றிலும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர்

2010 மே 7]

பயன்படுத்தப்படுகின்றனர். அரசு விழாக்களில், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரை ஈடுபடுத்துவன்மூலம் அவ்விழாக்களின் நன்மதிப்பு கூடுதலாக மெருகேறியுள்ளது.

53. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஏழு கம்பெனிகள் 10-4-2009 முதல் 1-5-2009 வரை கர்நாடகம் மற்றும் கேரள மாநிலங்களில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பணிகளில் ஈடுபட்டன. அதேபோன்று, மகாராஷ்டிர மாநிலத்தில் நடைபெற்ற மாநில தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஐந்து கம்பெனிகள் 2-10-2009 முதல் 18-10-2009 வரை அனுப்பி வைக்கப்பட்டன. ஆந்திர அரசின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஐந்து கம்பெனிகள் 24-12-2009 ஆம் நாளன்று அம்மாநிலத்திற்கு அனுப்பப்பட்டன.

நியமனம் செய்யப்பட்ட காவலர்களைப் பணியமர்த்துதல்

54. ஏறத்தாழ 5,608 காவலர்களுக்கு 27 தற்காலிகக் காவலர் பயிற்சிப் பள்ளிகளில் 5 மாதப் பயிற்சி (நான்கு மாதம் அடிப்படை பயிற்சி + ஒரு மாதம் செய்முறைப் பயிற்சி) 1-3-2009 அன்று முதல் வழங்கப்பட்டு அவர்கள் 5-8-2009 முற்பகல் முதல் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியமர்த்தப்பட்டனர். மேலும் தேர்வு செய்யப்பட்ட 1,327 காவலர்களுக்கு 6 தற்காலிக காவலர் பயிற்சி பள்ளிகளில் 8 மாத பயிற்சி (ஏழு மாதம் அடிப்படை பயிற்சி + ஒரு மாதம் செய்முறைப் பயிற்சி) 15-12-2008 அன்று முதல் வழங்கப்பட்டு, 18-8-2009 முதல் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் ஆயுதப் படைக்குப் பணியிட மாற்றம் செய்யப்படுதல்

55. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளில் மூன்றாண்டுகள் பணி முடித்த 4,349 பேர் பணியிட மாற்றம் செய்யப்பட்டு, ஆகஸ்ட், 2009-ல் மாவட்ட / மாநகர ஆயுதப் படையில் பணியமர்த்தப்பட்டனர்.

56. 2008 ஆம் ஆண்டில், ஆயுதக் காவல் படையில் குழலிசைக் குழுக் காவலர்கள் மற்றும் குழலிசைக் குழுத் தலைவர்கள் பணிக்கான தேர்வு நடத்தப்பட்டு, ஏறத்தாழ 285 பேர் குழலிசைக்

[2010 மே 7

குழுக் காவலர்களாகவும், மூவர் குழலிசைக் குழுத் தலைவர்களாகவும் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் தமிழ்நாடு காவல் துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஆவடியிலுள்ள ரெஜிமென்டல் மையத்தில் அவர்களுக்கு 7 மாத காலப் பயிற்சி 18-01-2010 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

கடலோரக் காவல் படை

57. கடலோரக் காவல் படைக்குக் காவல் துறை கூடுதல் இயக்குநர் தலைவராக உள்ளார். இவருக்கு உதவிகரமாகக் காவல் துறைத் தலைவர் ஒருவரும், காவல் கண்காணிப்பாளர் ஒருவரும் உள்ளனர். எரிபொருள், மருந்துப் பொருள்கள், இதர அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவற்றைத் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குக் கடல் வழியாக கடத்துதல், தமிழ்நாட்டிற்குள் போராளிகள் ஊடுருவல், மீனவர்கள் மற்றும் போராளிகள் இடையிலான கூட்டுச் சதி போன்றவற்றைத் தடுக்கும் வகையில் கடலோரக் காவல் படை உருவாக்கப்பட்டது.

58. எதிர்பாராத விதமாக நடத்தப்படும் தாக்குதலை எதிர்கொள்ளவும், சமாளிக்கவும் கடலோரக் காவல் படையினர் 'Operation Barricade' மற்றும் 'Rakshak' எனும் ஒத்திகை நடவடிக்கைப் பயிற்சியில் ஈடுபட்டனர். 12 மிதவைக் காவல் நிலையங்கள், 5 புறக்காவல் நிலையங்கள், 87 சோதனைச் சாவடிகள் ஆகியவற்றுடன் வாடகைக்கு எடுக்கப்பட்ட பதினோரு படகுகளின் ரோந்து பணிகளும் கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றன. கடலோரப் பாதுகாப்பிற்கென ஓர் இலவசத் தொலைபேசி அழைப்பு எண் (1093) உருவாக்கப்பட்டு, அதன்மூலம் நல்ல பலன்கள் ஏற்பட்டு வருகின்றன. இதில் இரண்டாவது கட்டமாகக் கூடுதலாக 30 கடலோரக் காவல் நிலையங்கள் அமைக்கவும், 20 படகுகளும் 175 நீரிலும், நிலத்திலும் செல்லக்கூடிய வாகனங்களும் வாங்குவது தொடர்பான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சர்வதேசக் கடலோர எல்லையைத் தவிர தமிழ்நாடு மூன்று மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்துடன் நில எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. பிற மாநிலங்களுடன் ஒத்துழைப்பும், தகவல்களும் நல்லமுறையில் பரிவர்த்தனை செய்யப்படுகிறது. எல்லையோர மாவட்டங்களில் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன.

2010 மே 7]

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

59. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவானது காவல் துறைத் தலைவர் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. அவருக்கு உதவியாக ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் (மத்திய நுண்ணறிவுப் பிரிவு) மற்றும் சென்னை, சேலம், மதுரை ஆகிய மாநகரங்களில் மூன்று காவல் துறைக் கண்காணிப்பளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மாநிலம் முழுவதும் 94 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் உள்ளன. அரசாணை நிலை எண் 63, உள் துறை, மதுவிலக்கு அமலாக்கம் (VII), நாள் 20-10-2009-ன்படி கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் மற்றும் விற்பனை செய்வோரில் திருந்தியோரின் புதுவாழ்வுக்காக ரூபாய் 2.2 கோடியில் புதுவாழ்வு நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின்கீழ், புதுவாழ்வுக் குழு ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களை ஏலம் விடுவதற்குத் தொடர்புடைய மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களில் குழுக்களை அமைப்பது தொடர்பாக ஆணையிடப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில், மொத்தம் 2,132 பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் ரூ.278,15,405-க்கு ஏலம் விடப்பட்டன. புதுச்சேரி, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களிலிருந்து எரிசாராயம், இரண்டாந்தர / இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு போலி மதுபானங்கள், சாராய பாக்கெட்டுகள் ஆகியவை தமிழகத்திற்குள் வாகனங்களின்மூலம் கள்ளத்தனமாகக் கடத்தி வருவதைத் தடுக்கும்பொருட்டு நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, சேலம், நீலகிரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள காவலர்களைக் கொண்டு 21 இடங்களில் வாகன சோதனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கள்ளச்சாராயம் / மெத்தனால் போன்றவற்றினால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புடன் மாநிலம் தழுவிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கள்ளச்சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு போலி மதுபானங்களைத் தமிழ்நாட்டில் ஒழிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நடவடிக்கை தொடர்ந்து தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

[2010 மே 7

2009 ஆம் ஆண்டு (ஜனவரி முதல் டிசம்பர் வரை)

- *1,18,963 மதுவிலக்கு சம்பந்தப்பட்ட வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 1,13,580 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*
- *30.88 இலட்சம் லிட்டர் கள்ளச் சாராயம் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.*
- *17.95 இலட்சம் லிட்டர் சாராய ஊறல்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.*
- *83,664 லிட்டர் 'கள்' பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.*
- *நான்கு சக்கர வாகனங்களில் கடத்தப்பட்ட 2.37 இலட்சம் லிட்டர் எரி சாராயம் உள்பட மொத்தம் 4.54 இலட்சம் லிட்டர் எரி சாராயம் பறிமுதல் செய்யப்பட்டது.*
- *ஆந்திரா, கர்நாடகா, புதுச்சேரி மற்றும் ஏனைய மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்பட்ட 2.38 இலட்சம் லிட்டர் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு போலி மது பானங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.*
- *மதுவிலக்குக் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்ட 2,207 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.*
- *31-12-2009 வரை மதுவிலக்குக் குற்றங்களில் ஈடுபட்ட 486 குற்றவாளிகள் தமிழ்நாடு சட்டம் 14/1982-ன்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

இரயில்வே காவல் படை

60. இரயில்வே காவல் படை, 1932 ஆம் ஆண்டு திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, 1981 ஆம் ஆண்டில், அதனை இரண்டாகப் பிரித்து, சென்னையில் ஒரு புதிய இரயில்வே காவல் படை உருவாக்கப்பட்டது. தற்போது, காவல் துறைத் தலைவரின் தலைமையில் 33 இரயில்வே காவல் நிலையங்கள், 24 இரயில்வே புறக்காவல் நிலையங்கள், 3 இரயில்வே நடமாடும் காவல் நிலையங்கள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இரயில்வே காவலர்கள் இரயில் பயணங்களின்போதும், நடைமேடைகளிலும் நிகழும் குற்றங்களைத் தடுத்து, புலன் விசாரணை செய்து,

2010 மே 7]

இரயில்வே சொத்துகளுக்குப் பாதுகாப்பு அளித்து வருகின்றனர். இதற்காக, இரயில்வே பாதுகாப்புப் படையினர் உள்ளூர் காவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர். இரயில்வே காவல் படையானது 5,525 கிலோ மீட்டர் நீள இரயில்வே போக்குவரத்தினைக் கண்காணித்து வருகிறது.

61. 2008 ஆம் ஆண்டில் 310 வழக்குகளும், 2009 ஆம் ஆண்டில் 320 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 320 வழக்குகளில், 229 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, ரூ.51,63,353/- மதிப்பிலான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

62. இரயிலில் குளிர்சாதனப் பெட்டிகளில் பயணம் செய்பவர்களின் பைகளைத் தொடர்ந்து திருடி வந்த ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த இருவரைத் தீவிர புலன் விசாரணைக்குப் பின்னர், 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம், இரயில்வே காவல் படையினர் கைது செய்தனர். 2007 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற குற்ற வழக்குகளில் 25 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.68 இலட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் மீட்கப்பட்டன. 20-01-2010 அன்று, புதுடில்லியில் இரயில்வே அமைச்சகம் சார்பில் நடைபெற்ற மாநில உள் துறைச் செயலர்கள் மாநாட்டில், மாநிலங்களிடையே தொடர்ந்து திருடி வந்த கும்பலைக் கைது செய்த பணி வெகுவாகப் பாராட்டப்பட்டது.

63. ஏனைய மாநிலங்களில் நடைபெற்ற குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகார்களில் பெரும்பாலானவை முறையாகப் பதிவு செய்யப்படாமலோ அல்லது அப்புகார்கள் தொலைந்துபோன நிலையிலோ உள்ளன. அதனால், தமிழக இரயில்வே காவல் படையானது வழக்குகளை இடமாற்றம் செய்யும்போது புதிய முறையைக் கையாண்டு, சம்பந்தப்பட்ட மாநில அரசு இரயில்வே காவல் படைக்கு வழக்குகள் மாற்றம் செய்யப்பட்டு, அது குறித்த தொடர் பணியைக் கவனித்து வருகிறது. அந்தந்த அரசு இரயில்வே காவல் அலகிடமிருந்து முதல் தகவல் அறிக்கை எண்கள் பெறப்பட்டு, அதை பாதிக்கப்பட்டவர்களிடம், தொடர் நடவடிக்கைக்காக அளிக்கிறது. இப்புதிய முயற்சி தமிழ்நாடு இரயில்வே காவல் துறைத் தலைவரால் மேற்கொள்ளப்பட்டு, ஆந்திரப்பிரதேசம், கேரளா மற்றும் கர்நாடகா போன்ற தென் மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முயற்சி 20-1-2010 அன்று புதுடில்லியில் இரயில்வே அமைச்சகம் ஏற்பாடு செய்த மாநில

[2010 மே 7

உள் துறைச் செயலர்கள் மாநாட்டில் வெகுவாக பாராட்டப்பட்டது. இம்முயற்சியைப் பிற மாநிலங்களிலும் பின்பற்றுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. அனைத்திந்திய அளவில் இம்மாதிரியான புது அணுகுமுறையைச் செயல்படுத்த ஒரு குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

மோப்ப நாய்ப்படை பிரிவு

64. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், ஆணையரகங்கள் மற்றும் சிறப்பு இலக்குப் படை, இரயில்வே காவல் படை, அதிரடிப் படை ஆகிய சிறப்புப் பிரிவுகளிலும் தமிழ்நாடு காவல் துறையின் மோப்ப நாய்ப்படைப் பிரிவுகள் உள்ளன. குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு, தடயங்களை மோப்பம் பிடிக்கும் 85 மோப்ப நாய்களும், வெடிமருந்துப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் 98 மோப்ப நாய்களும், போதைப் பொருட்களைக் கண்டறிய 12 மோப்ப நாய்களும் உள்ளன. குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும் குற்றப் புலனாய்விலும் மோப்ப நாய்ப்படைப் பிரிவுகள் சிறந்த முறையில் சேவை செய்து வருகின்றன.

குதிரைப்படை பிரிவு

65. சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகரங்களில் உள்ள தமிழக காவல் துறையின் குதிரைப்படை பிரிவில் 30 குதிரைகள் உள்ளன. கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும், குடியரசு தினம், சுதந்திர தினம், பதக்கம் வழங்கும் விழா ஆகிய விழாக்களின்போது அணிவகுப்புகளிலும் இந்தக் குதிரைப்படை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

66. தமிழக அரசால் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வாரியம், தமிழ்நாடு காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகியவற்றுக்கு முறையே காவல் உதவி ஆய்வாளர்கள் (ஆண்/பெண்), உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம் ஆண்/பெண்), இரண்டாம் நிலை காவலர்கள் (ஆண்/பெண்), இரண்டாம் நிலை சிறைத் துறைக் காவலர்கள் (ஆண்/பெண்) மற்றும் தீயணைப்புப் படை வீரர்கள் ஆகிய சீருடைப் பணியாளர்களைத் தொழில் ரீதியாக நேர்மையாகவும் ஒளிவுமறைவற்ற முறையிலும் தேர்வு செய்து வருகிறது.

2010 மே 7]

67. 2009 ஆம் ஆண்டில், இவ்வாரியம், 209 உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்), 4,054 இரண்டாம் நிலைக் காவலர்கள் (1,253 பெண் காவலர்கள் உட்பட), 339 தீயணைப்புப் படை வீரர்கள் மற்றும் 354 இரண்டாம் நிலை சிறைத் துறைக் காவலர்கள் ஆகியோரைத் தேர்வு செய்துள்ளது. 4,000 காவலர்களைத் தேர்வு செய்யும் பணி அண்மையில் நிறைவுற்றது. இரண்டாம் நிலை சிறைக் காவலர், தீயணைப்போர் பதவிகள் அல்லாமல் 9,000 இரண்டாம் நிலை காவலர்களைத் தேர்வு செய்ய வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஊர்க்காவல் படை

68. தமிழ்நாடு ஊர்க்காவல் படையானது 1963 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் ஒரு தன்னார்வ சேவை அமைப்பாகும். 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊர்க்காவல் படை விதியின்கீழ், சட்டம் ஒழுங்கைப் பேணுவதில் காவல் துறைக்கு உதவிடவும், வெள்ளம், தீ விபத்து, புயல் போன்ற அசாதாரண நிகழ்வுகளின்போது உதவிடவும் உருவாக்கப்பட்டதாகும். ஊர்க்காவல் படையினர் போக்குவரத்தை முறைப்படுத்துதல், கூட்டத்தைக் கட்டுப்படுத்துதல், உள்நாட்டுப் பாதுகாப்பு, மத நல்லிணக்கத்தைப் பேணுதல், உடல்நலம், சுகாதாரம் மற்றும் சாலைப் பாதுகாப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பணிகளில் மிகவும் உதவிகரமாகச் செயல்பட்டு வருகின்றனர். இதுநாள் வரையில், 2,750 பெண் ஊர்க்காவல் படையினர் உட்பட 11,622 ஊர்க்காவல் படையினரைக் கொண்ட ஊர்க்காவல் படை அணிகள் உள்ளன. அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநகர காவல் ஆணையரகங்களில் பெண்கள் அணி உள்ளிட்ட ஊர்க்காவல் படை பிரிவு செயல்பட்டு வருகிறது. ஊர்க்காவல் படை செயல்பாட்டினை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:

அ) திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் ஒரு பகுதியாக, தலைமையேற்று நடத்தும் ஆற்றலுக்கான பயிற்சி, ஊர்க்காவல் படை வட்டாரத் தளபதிகளுக்கு முதன்முறையாக தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் அளிக்கப்பட்டது.

ஆ) அண்ணா மேலாண்மை நிறுவனத்தில், சென்னை மாநகரம் மற்றும் அண்டை மாவட்டங்களைச் சார்ந்த ஏறத்தாழ

[2010 மே 7

350 ஊர்க்காவல் படையினருக்குப் பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

இ) அனுபவமிக்க ஊர்க்காவல் படையினரின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், உதவி தலைமைத் தளவாய்களின் ஓய்வு வயது 58-லிருந்து 65-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஈ) இளைஞர்களை ஈர்க்கும் வகையிலும், தற்போதைய ஊர்க்காவல் படையினரை ஊக்குவிக்கும் வகையிலும், பணிப்படி ரூபாய் 45-லிருந்து ரூபாய் 65-ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

குடிமைப்பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவு

69. குடிமைப்பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவானது ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநரைத் தலைவராகக் கொண்டு, அவருக்கு உதவியாக ஒரு காவல் துறைத் தலைவர் மற்றும் இரண்டு காவல் துறை கண்காணிப்பாளர்களுடன், சென்னை மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. சென்னை, திருச்சி, கோவை மற்றும் மதுரை மாவட்டங்களிலுள்ள 20 நுகர்பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவுகளை மேற்பார்வையிட நான்கு காவல் துறை துணை கண்காணிப்பாளர்கள் உள்ளனர். ஒவ்வொரு பிரிவும் ஒரு காவல் ஆய்வாளர் தலைமையில் இயங்கி வருகின்றது.

குடிமைப்பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவின் கடமைகள்

70. அரிசி மற்றும் இன்றியமையாப் பொருட்கள் பதுக்கலைத் தடுத்தல், இன்றியமையாப் பொருட்கள் பிற மாநிலங்களுக்குக் கடத்தப்படுவதைத் தடுத்தல், வரையறுக்கப்பட்ட பொருட்கள், பெட்ரோலியப் பொருட்கள் போன்றவற்றில் கலப்படம் செய்பவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுத் தருதல், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசி, மண்ணெண்ணெய் மற்றும் பிற இன்றியமையாப் பொருட்களைச் சட்டத்திற்குப் புறம்பாகக் கடத்துவதைத் தடுத்தல் போன்றவை குடிமைப்பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவின் முக்கிய கடமைகளாகும்.

குடிமைப்பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவின் செயல்பாடு

71. இப்பிரிவு, 2009 ஆம் ஆண்டில், 9,771 வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. 1-1-2009 முதல் 31-12-2009 வரையிலான கால அளவில்

2010 மே 7]

கடத்தப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட இன்றியமையாப் பொருட்கள் பின்வருமாறு:

வ. எண்	பொருட்கள்	மதிப்பு
1)	40,265.93 குவிண்டால் பொது விநியோக திட்ட அரிசி	ரூ.4,83,19,116
2)	1,63,117 லிட்டர் பொது விநியோக திட்ட மண்ணெண்ணெய்	ரூ.24,46,755
3)	2,571 சமையல் எரிவாயு சிலிண்டர்	ரூ.77,13,000
4)	பெட்ரோல், டீசல், கரைசல் போன்ற பொருட்கள்	ரூ. 48,53,867

4,795 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 1,369 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.6,33,32,738/- ஆகும்.

72. 2009 ஆம் ஆண்டில், 1980 ஆம் ஆண்டு கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் விநியோகப் பராமரிப்பு சட்டத்தின்கீழ், 116 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சிறப்பு ரோந்துப்படை

73. அண்டை மாநிலங்களுக்குப் பொது விநியோகத் திட்ட அரிசி கடத்தப்படுவதைத் தடுக்கும் வகையில், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, வேலூர், கன்னியாகுமரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில், ஓராண்டு காலத்திற்கு ஒரு காவல் உதவி ஆய்வாளர், ஐந்து இரண்டாம் நிலைக் காவலர்கள் ஒரு ஓட்டுநர் காவலர் மற்றும் ஒரு ஈப்பு அடங்கிய ஐந்து சிறப்பு ரோந்துப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சிறப்பு ரோந்துப் படையால் பெட்ரோல், டீசல், பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் ஆகியவற்றில் கலப்படம் செய்வதைத் தடுப்பதற்காக சிறப்புச் சோதனைகள் நடத்தப்படும். சமையல் எரிவாயு சிலிண்டர்களைத் தவறாகப் பயன்படுத்துவதைக்

[2010 மே 7

கண்டுபிடித்து, குற்றவாளிகள்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவு

74. 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இப்பிரிவு செயல்படத் தொடங்கியது. தற்போது, கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையின் கீழ் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவிற்கு நெடுஞ்சாலை ரோந்து கண்காணிப்புப் பிரிவைச் (தலைமையிடம்) சேர்ந்த ஓர் உதவி ஆய்வாளரும், 4 ஏனைய பதவித் தரங்களைச் சேர்ந்த காவல் பணியாளர்களும் இணைக்கப்பட்டுள்ளனர். இதன் பணி விவரம் பின்வருமாறு ஆகும்:

அ) இப்பிரிவு, மாநிலத்திலுள்ள 122 நெடுஞ்சாலை ரோந்துப் பணிக்குழு வாகனங்களின் செயல்பாடுகளை, திசை காட்டும் கருவிகள் (ஜிபிஎஸ்) மூலம், 24 மணி நேரமும், சுழற்சி முறையில் கண்காணித்து வருகிறது.

ஆ) நெடுஞ்சாலை ரோந்துப் பணிக் குழுவினர் சாலை விதிகள் குறித்து கற்பிப்பதுடன், நெடுஞ்சாலைகளில் நிகழும் விபத்துகளைத் தடுக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். பொதுவாக, காவலர்கள் பணியில் இருக்கும்போது, பொதுமக்கள் சாலை விதிகளை மீறுவதில்லை. இது தவிர, நெடுஞ்சாலை ரோந்து பணிக் குழுவினர் போக்குவரத்து நெரிசலைச் சீர்செய்வதோடு, சூழ்நிலையின் காரணமாக ஏற்படுகின்ற திடீர் சாலை மறியல்களையும் திறம்படக் கையாண்டு வருகின்றனர்.

இ) நெடுஞ்சாலை ரோந்துப் பணிக் குழுக்கள் அனைத்தும் மாநில போக்குவரத்துத் திட்டமிடல் பிரிவின் தலைமையகத்துடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளதால், அக்குழுக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் ஏதாவது இருப்பின், அவை உடனுக்குடன் தீர்த்து வைக்கப்படுகின்றன. இதனால், ரோந்துப் பணிகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை.

ஈ) மாவட்ட அளவில் வாகனங்களைக் கண்காணித்து சீர்படுத்தும் நோக்கத்தோடு ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஆணையரகத்திற்கும் தனித்தன்மை வாய்ந்த அடையாளக் குறியீட்டுடன் கூடிய சங்கேத வார்த்தை பயன்பாட்டு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2010 மே 7]

உ) நெடுஞ்சாலைகளில் விபத்து நிகழும் போது, சம்பந்தப்பட்ட ரோந்துப் பணிக் குழுவினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, அவசர கால விபத்து நிவாரண மையங்களுடன் ஒருங்கிணைந்து, பாதிப்புக்குள்ளானவரின் உயிரைக் காப்பாற்றுகின்றனர். 2009 ஆம் ஆண்டில் 19,721 பேருக்கு நெடுஞ்சாலை ரோந்துப் பணிக் குழுக்கள் முதலுதவி அளித்துள்ளன. அதில், 7,638 நபர்களுக்கு உரிய நேரத்தில் (கோல்டன் ஹவர்) உயிர் காக்கும் முதலுதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஊ) சாலை விபத்துக்களைத் தடுப்பதற்காக, மோட்டார் வாகன சட்ட விதிகளை முறையாகச் செயல்படுத்துமாறு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும், காவல் துறை ஆணையாளர்களுக்கும் முறையான அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

X. வாகன வசதி

75. குற்றம் இழைப்போரால் உருவாக்கப்பட்ட யாதொரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளையும் / நிலைமைகளையும் திறம்படக் கையாண்டு, விரைவு நடவடிக்கை எடுத்து, நிலைமையினைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்குக் காவல் துறைக்கு வாகன வசதி மிகவும் அவசியமாகிறது. காவல் துறைக்கான வாகனங்களின் தரம் மற்றும் எண்ணிக்கையை உயர்த்துவதில் தமிழக அரசு ஆர்வம் காட்டி வருகிறது.

76. இவற்றுடன் மாவோயிஸ்டுகள்/நக்சலைட்டுகள்/தீவிரவாதிகள் ஆகியோர் எதிர்பாராத வகையில் மறைந்திருந்து வாகனங்களைத் தாக்கும்போது, அதனை எதிர்கொள்ள மோட்டார் சைக்கிள் அதிரடிப்படை வீரர்களை உருவாக்குவதற்காக, காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ், 150 சி.சி. திறன் கொண்ட 20 புதிய மோட்டார் சைக்கிள்கள் கொள்முதல் செய்யப்பட்டு, சிறப்பு அதிரடிப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளன. கடலோரப் பாதுகாப்புப் பிரிவு செவ்வனே பணியாற்றுவதற்கும், கண்காணிப்பைத் தீவிரப்படுத்துவதற்கும், கடலோரப் பகுதிகளில் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்கும் கடலோரப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 12 ஜீப்புகள், 180 சி.சி. திறன் கொண்ட 36 மோட்டார் சைக்கிள்கள் ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு, கடலோரப் பாதுகாப்புப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

[2010 மே 7

77. இணைப்பு 12-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 31-12-2009 அன்றைய நிலவரப்படி, தமிழ்நாடு காவல் துறையில் 12,533 வாகனங்கள் உள்ளன.

XI. வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள்

78. காவல் துறையின் அனைத்து கட்டுமானப் பணிகள், சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் ஆகியவற்றை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மேற்கொண்டு வருகிறது. இக்கழகம் 1981 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

i) வீட்டு வசதி

ஆயுதப்படைக் காவலர்களும், உள்ளூர் காவலர்களும் அவசர அழைப்புகளின்போது, குறுகிய நேரத்தில் உடனடியாகப் பணிக்கு அறிக்கை செய்வதோடு, அகால வேளைகளிலும் நெருக்கடியான பணிகளைக் கவனிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். எனவே, அவர்களது சேவையை எந்த நேரத்திலும் திறம்பட பயன்படுத்திக் கொள்ளும் விதமாக, பணியிடத்திற்கு அருகில் குடியிருப்பு வசதிகள் செய்து தரவேண்டியது மிகவும் இன்றியமையாததாகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் வாயிலாக, அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டுவதற்காக, அரசு கால முறைப்படி நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. 1981 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் இன்று வரையில், மொத்தம் 26,385 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 2007-2008, 2008-2009 ஆகிய ஆண்டுகளில் ஆண்டுக்கு 2,000 குடியிருப்புகள் வீதம் கட்டுவதற்காக, மொத்தம் ரூ.241.79 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, மொத்தம் உள்ள 1,04,783 காவல் பணியாளர்களுக்கு 45,847 குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் 26,385 குடியிருப்புகள் காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் கட்டப்பட்டவையாகும். தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ள வீட்டு வசதித் தேவை 43.75 சதவிகிதமாகும். தற்போது நடைபெற்று வரும் 3,953 குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்ததும் மொத்தக் குடியிருப்புகள் 49,800 என்ற நிலையில் நிறைவு செய்யப்பட்டுள்ள வீட்டு வசதித் தேவை 47.52 சதவிகிதமாக உயரும்.

2010 மே 7]

2009-2010 ஆம் ஆண்டில், 2,000 குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ. 142.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்த பணிகள் தொடங்க உள்ளன.

வீட்டு வசதி நிலவரம்

ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை: 1,04,783

(31-3-2010 அன்றைய நிலவரப்படி)



ii) காவல் துறைக்கான கட்டடங்கள்

காவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணியுடன் காவல் நிலையங்கள், மாவட்ட காவல் அலுவலகங்கள், நகர காவல் அலுவலகங்கள், ஆயுதப்படைப் பிரிவு வளாகம் மற்றும் இதர கட்டடங்களையும், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் மேற்கொண்டு வருகிறது. இக்கழகமானது, ஒட்டுமொத்தமாக, ரூ.12,882.31 இலட்சம் செலவில் இதுநாள் வரையில், 308 காவல் நிலையங்கள், 10 மாவட்ட காவல் அலுவலகங்கள், 6 ஆயுதப்படைப் பிரிவு வளாகங்கள், ஆவடி தமிழ்நாடு சிறப்புக் காவல்படை இரண்டாம் அணி, மணிமுத்தாறு தமிழ்நாடு சிறப்புக் காவல்படை

[2010 மே 7

ஒன்பதாம் அணி மற்றும் போச்சம்பள்ளி தமிழ்நாடு சிறப்புக் காவல்படை ஏழாம் அணி ஆகிய அணிகளுக்காக 3 நிருவாக கட்டடங்கள், புனித தோமையார் மலை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 4 மண்டல அலுவலகக் கட்டடங்கள் மற்றும் நவீன கட்டுப்பாட்டு அறைகள், பணியிடை பயிற்சி மையங்கள், ஒத்திவாக்கம் துப்பாக்கிசுடும் சரகம், தடய அறிவியல் துறை நூலகம், மாநில ஆயுதக் கிடங்கு, லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறைக்கான அலுவலகம் மறு அஞ்சல் நிலையம் (Repeater Station), ஓய்வறைகள், மோப்ப நாய்களுக்கான உறைவிடங்கள் மற்றும் காவல் உயர் பயிற்சியகம் ஆகியவற்றிற்கான கட்டடங்களைக் கட்டியுள்ளது. ரூ.3,934.25 இலட்சம் செலவில் 125 காவல் நிலையங்கள் மற்றும் ரூ.3,387.85 இலட்சம் செலவில் இதர கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. தற்போதுள்ள மொத்த காவல் நிலையங்கள் செயல்படும் கட்டடங்களின் விவரம் பின்வருமாறு:-

காவல் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 1,482



2008 ஆம் ஆண்டில் காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் இணைப்புக் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. சென்னை எழும்பூரிலுள்ள காவல் ஆணையர்

2010 மே 7]

அலுவலக வளாகத்தில், மாநில குற்றப்பிரிவு அலுவலகத்தின் பயன்பாட்டுக்கென பல மாடிக் கட்டடம் ஒன்றைப் புதிதாகக் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒப்புதலை அரசு வழங்கியுள்ளது.

XII. தடய அறிவியல் துறை

79. தமிழ்நாடு தடய அறிவியல் துறையானது, பல்வேறு புலனாய்வு முகவரமைப்புகளின் அன்றாட பகுப்பாய்வுப் பணிகளில் அண்மைக்கால நவீன தொழில்நுட்பத்தைக் கையாளுவதில் முன்னோடியாக விளங்குகிறது. புலன் விசாரணையின்போது, எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு புலனாய்வு நிறுவனங்களின் பணித்திறனை மேம்படுத்துவதற்கும், மர்மமான கொடுங்குற்றங்களையும், வழக்கமான குற்றங்களையும் புலன் விசாரணை செய்வதற்கும் இத்துறை பேருதவியாக இருந்து வருகிறது. மேலும், நீதித் துறைக்கு அறிவியல்சார் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி சரியான தீர்ப்புகளை அளிக்க தமிழ்நாடு தடய அறிவியல் துறை உதவி வருகிறது. 2009 ஆம் ஆண்டில், 62,770 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 2,39,510 சாட்சியப் பொருட்களை இத்துறை பகுப்பாய்வு செய்துள்ளது.

80. பின்வரும் திட்டங்களை செயற்படுத்துவதற்காக மாநில அரசு தாராளமாக நிதி உதவி வழங்கி உள்ளது:

i) கூடுதல் கட்டடம்

தமிழ்நாடு தடய அறிவியல் துறைக்கு இடவசதி அளிப்பதில் இதுவரை பிரச்சினை இருந்து வந்தது. எனினும், 30-7-2008 அன்று தமிழ்நாடு தடய அறிவியல் துறைக்கென 4 மாடிக் கட்டடத்தைத் திறந்து வைத்ததன்மூலம் இத்துறையின் இட வசதியின்மை பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இத்துறைக்கென ரூ.111 இலட்சம் செலவில் நவீன நூலகம், கலையரங்கம், அருங்காட்சியகம் ஆகியன அடங்கிய புதிய நூலகக் கட்டடம் ஒன்றும் முடிவுறும் நிலையில் உள்ளது. மிக விரைவிலேயே அப்புதிய நூலகக் கட்டடம் திறந்து வைக்கப்படும்.

ii) கணினிமயமாக்கல்

இத்துறையைக் கணினிமயமாக்கும் பணி நிறைவடைந்துள்ளது. மண்டல தடய அறிவியல் ஆய்வுக் கூடங்களையும் கணினிமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2010 மே 7

iii) புதிய ஆய்வுக் கூடங்கள்

இத்துறையில் போதை மருந்து ஆய்வுப் பிரிவு அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுவதற்கு குஜராத்திலுள்ள தடய அறிவியல் இயக்குநரகத்துடன் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதி நிலையை எட்டியுள்ளது. சென்னையிலுள்ள மனநல மருத்துவ நிறுவனத்துடன் ஏற்கெனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி, அப்பிரிவுக்கென புதிய கட்டடத்தில் இடம் ஒதுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தென் மாவட்டத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், மதுரையிலுள்ள மண்டல தடய அறிவியல் ஆய்வுக் கூடத்தில் முழு அளவிலான ஆவணப் பிரிவு ஒன்று ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. மதுரையிலுள்ள மண்டல தடய அறிவியல் ஆய்வுக் கூடத்தில் மரபணு ஆராய்ச்சிப் பிரிவை ஏற்படுத்துவதற்காக, நவீன உபகரணங்கள் மற்றும் தேவையான கட்டமைப்பு வசதிகளுக்காக, அரசு ரூ.250 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. மரபணு சோதனைமூலம் தந்தையை அடையாளம் காண வேண்டிய வழக்குகளில், பாதிப்புக்குள்ளான அபலைப் பெண்களைக் காப்பாற்றவும், குற்றம் இழைத்தவர்களைத் தண்டிக்கவும், தென் மாவட்டங்களில் இது மிகவும் உதவிகரமாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

மாநிலப் போக்குவரத்துத் திட்டமிடல் பிரிவு

சாலை விபத்துத் தகவல் நிருவாகத் திட்டம் (RADMS Project)

81. அரசு, உள் (போக்குவரத்து-5) துறையின் 23-12-2008 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1659-ன்படி "தமிழ்நாடு சாலைப் பிரிவுத் திட்டம்" (TNRSP) என்ற அமைப்புடன் இணைந்து சாலை விபத்து குறித்த தகவல்களை இணையதளம் வாயிலாகச் சேகரித்து, பகுப்பாய்வு செய்து, "சாலை விபத்து தகவல் நிருவாக ஏற்பாட்டு முறை'' மென்பொருள் குறித்த பொறுப்பினை மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவிடம் அளித்துள்ளது. விபத்து தரவுகள் பெறுவது குறித்தும், அதனைச் சார்ந்த இதர பிரச்சினைகள் குறித்தும் ஆய்வு செய்து கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் ஒவ்வொரு மாவட்டத்தில்/ஆணையரகத்தில் மாவட்ட போக்குவரத்து தகவல் நிருவாக குழுக்கள் (DTDMT) அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதாரக் குழுக்களையும் (RPT) மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவு

ஏற்படுத்தியுள்ளது. சாலை விபத்து தகவல் நிருவாக ஏற்பாட்டு முறை மென்பொருளை முறையாகச் செயல்பாட்டிற்குக் கொண்டு வரும் பொருட்டு இதில் தரவினைப் பதிவு செய்வதற்கு மாவட்டங்களில் / ஆணையரகங்களிலுள்ள ஆதாரக் குழுக்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவில் பணியாற்றுகின்ற குழு ஒன்று தொழில்நுட்ப உதவி ஆய்வாளர் தலைமையில் பயிற்சி அளித்து வருகிறது. தற்போது, விபத்து குறித்த தகவல்களை சாலை விபத்து தகவல் நிருவாக ஏற்பாட்டு முறை மென்பொருளில் பதிவு செய்யும் பணியினை ஆதாரக் குழுக்கள் செய்துவரும் நிலையில், அப்பணி மிக விரைவிலேயே நிறைவு பெறவுள்ளது.

காவல் தொலைத் தொடர்புப் பிரிவு

82. காவல் நிலையத்தில் தரவுகளைப் பெற்று, பராமரிப்பதற்கு "கேரஸ்" (CAARUS) மென்பொருள் பயன்படுகிறது. அனைத்து காவல் நிலையங்களில் அகண்ட அலைவரிசை சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக, தரவுகளைப் பிரதான கட்டுப்பாட்டுக் கருவிக்கு அனுப்புவதற்கென "கேரஸ்" (CAARUS) மென்பொருள் மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. சென்னை புறநகரில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும் இந்த மென்பொருள் நிறுவப்பட்டு, அதன் செயல்பாடுகள் பரிசோதிக்கப்பட்டன. இந்த மென்பொருளின் வாயிலாக, அன்றாட நிலவர அறிக்கையை (DSR) உயரதிகாரிகள் பார்க்க இயலும்.

83. மிக உயர்வலை தொலை தொடர்பு சாதனத்தையும், தொலைபேசியையும் இணைப்பதற்கான உபகரணத்தை, காவல் தொலை தொடர்புப் பிரிவின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் வடிவமைத்துள்ளது. அதுபோன்று 25 உபகரணங்கள் வடிவமைக்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் (இலக்கமுறை நுண்ணலை தொலை தொடர்பு வசதி மேற்கொள்ளப்பட்டு வரும் சில மாவட்டங்கள் நீங்கலாக) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம், அதிகாரிகள் தங்களது நுண்ணலை தொலைபேசியைப் பயன்படுத்தி, எந்தவொரு மாவட்டத்தின் மிக உயர்வலை தொலை தொடர்பு சாதனத் தகவலைக் கண்காணிக்க இயலும். தேவைப்படும்போது அதே சாதனத்தைப் பயன்படுத்தி, அவர்கள் அறிவுரைகளையும் பிறப்பிக்க இயலும். அவ்வாறு பிறப்பிக்கப்படும் அறிவுரைகள், மாவட்டங்களில் உள்ள மிக உயர்வலை தொலைத் தொடர்பு சாதனம் வழியாக பெறப்படும். மாவட்டங்களில் மிக

[2010 மே 7

உயர்வலை தொலை தொடர்பு சாதனத் தகவலை மூன்று அதிகாரிகள் ஒரே நேரத்தில் கண்காணிக்க இயலும். சரக காவல் துறை துணைத் தலைவர்கள், மண்டல காவல் துறை தலைவர்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு காவல் துறை கூடுதல் இயக்குநர், தங்களது அலுவலகத்தில் இருந்தபடியே சட்டம் ஒழுங்கு நிலவரத்தைக் கண்காணிக்க இது வகை செய்கிறது.

நிறைவுரை

84. காவல் துறையின் ஒட்டுமொத்த செயல்பாடு மனநிறைவு அளிப்பதாக உள்ளது. தமிழ்நாட்டின் தொழில், பொருளாதார மேம்பாடு உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அத்தியாவசியமானதாகக் கருதப்படும் திறமையான நிர்வாகத்திற்காக இத்துறை தொடர்ந்து பாடுபடும்.

85. சமுதாயத்திலுள்ள, சாதாரண சாமான்ய மக்கள், நலிவுற்ற பிரிவினர் ஆகியோர் பயன்பெற வேண்டுமென்ற முக்கிய இலக்கை எய்துவதற்காக, அரசின் உதவிக்கரமாக இருந்து வரும் காவல் துறையானது அதில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. அந்தக் குறிக்கோளை அடைய காவல் துறையை நவீனமயமாக்குவதோடு அல்லாமல், பணியாளர்களின் மனப்போக்கில் மாற்றமும், பணி குறித்த செறிவூட்டுதலும் மிக அவசியமானதொன்றாகும். காவல் துறையினரை அவர்களுடைய அன்றாடப் பணியில், பொதுமக்களின் உற்ற நண்பனாக விளங்கும் அணுகுமுறையை இலக்காகக் கொண்டு காவல் துறையின் செயல்பாட்டினை மேம்படுத்துவது தொடர்பான அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு எடுக்கும். முறையான திட்டமிட்ட முயற்சிகளின் வாயிலாக, காவல் துறை அந்த இலக்கை எட்ட முடியும் என்று இந்த அரசு முழுமையாக நம்புகிறது. மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டு காவல் துறையை வழி நடத்திடவும், நேசக் கரம் நீட்டவும், நிதி வழங்கவும் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

2010 மே 7]

இணைப்பு–1

(பத்தி–7 பார்க்கவும்)

தமிழ்நாடு காவல் துறையின் நிர்வாக அமைப்பு – 1-1-2010 அன்றைய நிலவரப்படி



தமிழக அரசின் சில இடங்களின் விவரம்

1. காவல் துறை தலைமை இயக்குநர் / தமிழ்நாடு காவல் விட்டுவசதிக் கழகம், சென்னை.
2. காவல் துறை தலைமை இயக்குநர் - இயக்குநர் நிலையரப் பணிகள் மற்றும் பி.டி.ஆர் பணிகள், சென்னை.
3. காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் சிறைத் துறை, சென்னை.
4. கூடுதல் காவல் துறை இயக்குநர்- வடக்கு மண்டலம் - தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை.
5. கூடுதல் காவல் துறை இயக்குநர் - தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு காவல் வீட்டு வசதி கழகம் சென்னை.
6. கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர்- முதன்மை கண்காணிப்பு அதிகாரி, மாநில பேரிடர்களுக்குக் கழகம், சென்னை.
7. காவல் துறை தலைவர் - முதன்மை கண்காணிப்பு அதிகாரி, மாநில அரசு பேரிடர்களுக்குக் கழகம், நாகர்கோவில்.
8. காவல் துறை தலைவர் / முதன்மை கண்காணிப்பு அதிகாரி, தமிழ்நாடு வெடிந்தாய் மற்றும் வாந் பிரதிகளை கட்டுமரம்.
9. காவல் துறை தலைவர் / முதன்மை கண்காணிப்பு அதிகாரி, மாநில அரசு பேரிடர்களுக்குக் கழகம் (ஒருங்கிணைப்பு திருச்சி.
10. காவல் துறை தலைவர் / மாநில மனித உரிமைக் ஆணையம், சென்னை.
11. காவல் துறை தலைவர் / நிர்வாக உறுப்பினர் ஆணையர்-II, முப்படைகள், சென்னை.
12. காவல் துறை தலைவர் - முதன்மை கண்காணிப்பு அதிகாரி, தமிழ்நாடு கூட்டுறவு பால உற்பத்தியாளர் கூட்டமைப்பு, சென்னை.
13. காவல் கண்காணிப்பாளர் - மேலாண் ஆலுமான கண்காணிப்பு அதிகாரி, சென்னை.
14. காவல் கண்காணிப்பாளர் - மாநில மனித உரிமை ஆணையம், சென்னை.

DGP	காவல் துறை தலைமை இயக்குநர்	TS	தொழிற்முறையிய் பணிகள்
ADGP	கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர்	PTC	காவல் பயிற்சி கல்லூரி
IGP	காவல் துறை தலைவர்	TRNG	பயிற்சி
DIG	காவல் துறை துணைத் தலைவர்	TNUSRB	தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுவம்
AIG	காவல் துறை உதவித் தலைவர்	STC	மாநில போக்குவரத்துக் கழகம்
SP	காவல் துறை கண்காணிப்பாளர்	MTC	மாநகர் போக்குவரத்துக் கழகம்
COP	காவல் துறை ஆணையர்	TNPPL	தமிழ்நாடு வெடிந்தாய் மற்றும் காந்த நிறுவனம், பகழூர்
JCP	காவல் துறை நுண்ண ஆணையர்	TNEB	தமிழ்நாடு மின்வாரியம்
DCP	காவல் துறை துணை ஆணையர்	SHRC	மாநில மனித உரிமை ஆணையம்
CMD	தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்	STPC	மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவு
CMT	தளவாய்	TNPA	தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம்
CVO	முதன்மை விழிப்பு அதுவலர்	Int (IS)	நுண்ணறிவுப் பிரிவு (உள்நாட்டுப் பாதுகாப்பு)
SIT	சிறப்பு புலனாய்வுக் குழு	Estab	பணியமைப்புப் பிரிவு
STF	சிறப்பு அதிரடிப்படை	MOD	நலனையமைக்கல்
L&O	சட்டம் மற்றும் ஒழுங்கு	Spl. Oper	சிறப்பு செயலாக்கப் பிரிவு
HQ	தலையமைப்பிடம்	Cat-I	நிலை–1
EOW	பொருளாதாரக் குற்றப் பிரிவு	Cat-II	நிலை–2
ENF	அமலாக்கம்	Tech.	தொழில் நுட்பம்
CBCID	குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை		
CSG	கடுமைப் பாதுகாப்புப் பிரிவு		
HG	ஊர்க் காவலர்படை		

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–2

(பத்தி-19 பார்க்க)

2008 மற்றும் 2009 ஆண்டுகளில் நிகழ்ந்த காவல் துறை துப்பாக்கிச்சூடு சம்பவங்களின் விவரம்

வ. எண்	விவரம்	2008	2009
1.	துப்பாக்கிச் சூடு நடைபெற்ற சம்பவங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை	17	8
	அ) கலவரத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில்	6	2
	ஆ) கூட்டுக் கொள்ளையைத் தடுக்கும் நடவடிக்கையில்	—	1
	இ) பிற குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கையில்	9	5
	ஈ) மற்றவை	2	—
2.	இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை	10	4
	அ) காவல் துறையினர் (சம்பவங்களில்)	—	—
	ஆ) பொதுமக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்)	10	4
3.	காயமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை	53	15
	அ) காவல் துறையினர் (சம்பவங்களில்)	48	13
	ஆ) பொதுமக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்)	5	2

இணைப்பு–3

(பத்தி-20 பார்க்க)

பதிவான மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட சொத்து வழக்குகளைக் காட்டும் வரைபடம் (2007 முதல் 2009 வரை)



[2010 மே 7

இணைப்பு–4

(பத்தி-20 பார்க்க)

பதிவான மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட சொத்து வழக்குகள் (2007 முதல் 2009 வரை)

வ. எண்	தலைப்பு	2007		2008		2009	
		பதிவானவை	கண்டுபிடிக்கப் பட்டவை	பதிவானவை	கண்டுபிடிக்கப் பட்டவை	பதிவானவை	கண்டுபிடிக்கப் பட்டவை *
1.	ஆதாயக் கொலை	102	95	105	103	123	106
2.	கூட்டுக் கொள்ளை	88	79	100	95	97	84
3.	வழிப்பறி	495	447	662	591	1144	972
மொத்தம்		685	621	867	789	1364	1162

*(31-3-2010 வரை)

இணைப்பு–5

(பத்தி-20 பார்க்க)

குற்ற விகிதம்

வ. எண்	வருடம்	மக்கள் தொகை (லட்சத்தில்)	இ.த.ச. வழக்குகள்	குற்ற விகிதம்*	கண்டு பிடிக்கப்பட்ட இ.த.ச வழக்குகள்	தண்டனையில் முடிந்த இ.த.ச வழக்குகள்
1.	2007	656.29	172754	263.22	155251	67873
2.	2008	661.06	176578	267.11	163058	56774
3.	2009	665.66	174691	262.43	162897**	39113***

*குற்ற விகிதம்: குற்ற நிகழ்வு ஒரு இலட்சம் (1,00,000) மக்கள் தொகைக்கு
**(31-3-2010 வரை)
***(31-12-2009 வரை)

இணைப்பு-6

(பத்தி-20 பார்க்க)

நிகழ்ந்த மற்றும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வன்செயல் குற்றங்கள் (2007 முதல் 2009 வரை)

வ. எண்	தலைப்பு	2007				2008				2009			
		பதிவு*	கு.பா#	பூவி**	ம.தீ.##	பதிவு*	கு.பா#	பூவி**	ம.தீ.##	பதிவு*	கு.பா#	பூவி**	ம.தீ.##
1.	கொலை	1521	1344	34	143	1630	1371	133	126	1644	1145	424	75
2.	கொலை முயற்சி	2078	1614	66	198	2227	1842	328	157	2325	1389	857	79
3.	காயம்	16967	14643	203	2115	20529	16251	1253	3025	16147	12899	3360	1888
4.	கலவரம்	2375	1639	146	590	2811	1824	364	623	2397	1183	789	425
மொத்தம்		22941	19446	449	3046	27297	21288	2078	3931	24513	16616	5430	2467

குறிப்பு: பதிவு* - ஆன்டுவாரியாக பதிவானவை

கு.பா# - குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவை (தனாளை, குற்றம் நிரூபிக்கப்படாதது, தள்ளுபடி செய்யப்பட்டது மற்றும் நீதிமன்ற விசாரணை) (31.12.2009 வரை)

பூவி** - புலன் விசாரணையில் உள்ளவை (31.12.2009 வரை)

ம.தீ.## - மற்றவகையில் தீர்க்கப்பட்டவை (கண்டுபிடிக்கமுடியாதவை, உண்மைக்கு மாறானவை அல்லது சட்டப் பிரிவு மாற்றப்பட்டவை மற்றும் கழிவானவை) (31.12.2009 வரை)

[2010 மே 7

இணைப்பு–7

(பத்தி-20 பார்க்க)

கொலைக்கான காரணங்கள் (2007–2009)

வ. எண்	காரணங்கள்	2007	2008	2009
1.	குடும்பச் சண்டை	421	469	453
2.	வாய்த் தகராறு	355	427	372
3.	சொந்தப் பகை	285	284	282
4.	காதல் விவகாரம்	123	155	217
5.	பண பரிமாற்றம்	107	119	68
6.	நிலத் தகராறு	106	72	102
7.	குடிபோதையில் தகராறு	98	91	96
8.	அரசியல் காரணங்கள்	5	2	4
9.	பிற தகராறுகள் *	19	11	46
10.	சாதி பாகுபாடு	2	0	4
	மொத்தம்	1521	1630	1644

(குறிப்பு: * பிற தகராறுகள் – கண்டுபிடிக்கப்படாமல் உள்ளவை)

இணைப்பு–8

(பத்தி-21 பார்க்க)

பெண்களுக்கு எதிரான குற்ற நிகழ்வுகள் மற்றும் தீர்க்கப்பட்டவை (2007–2009)

வ. எண்	தலைப்பு	2007				2008				2009			
		பதிவு*	கு.ப#	பு.வி**	ம.தீ.##	பதிவு*	கு.ப#	பு.வி**	ம.தீ.##	பதிவு*	கு.ப#	பு.வி**	ம.தீ.##
1.	கற்பழிப்பு	523	432	27	64	573	405	122	46	596	269	301	26
2.	வரதட்சணையால் மரணம்	208	190	9	9	207	172	30	5	194	111	81	2
3.	கணவர் மற்றும் உறவினர்களால் கொடுமை	1976	1453	20	503	1648	1197	154	297	1242	855	216	171
4.	மானபங்கம்	1558	1276	10	272	1705	1346	73	286	1460	792	423	245
	மொத்தம்	**4265**	**3351**	**66**	**848**	**4133**	**3120**	**379**	**634**	**3492**	**2027**	**1021**	**444**

குறிப்பு: பதிவு* – ஆண்டுவாரியாக பதிவானவை

கு.ப# – குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவை (குண்டனை, குற்றம் நிரூபிக்கப்படாதது, தள்ளுபடி செய்யப்பட்டது மற்றும் நீதிமன்ற விசாரணை) (31.12.2009 வரை)

பு.வி** – புலன் விசாரணையில் உள்ளவை (31.12.2009 வரை)

ம.தீ##– மற்றவகையில் தீர்க்கப்பட்டவை (கண்டுபிடிக்கமுடியாதவை, உண்மைக்கு மாறானவை அல்லது சட்டப் பிரிவு மாற்றப்பட்டவை மற்றும் கழிவானவை) (31.12.2009 வரை)

[2010 மே 7

இணைப்பு –9

(பத்தி-22 பார்க்க)

போக்குவரத்து விபத்து வழக்குகள்

வருடம்	வாக்கு எண்ணிக்கை (இலட்சங்களில்)	சாலை விபத்துக்கள்	(2) மற்றும் (3) இடையே விகிதாச்சாரம்	மரணம் சம்பவித்தவை	மரணம் எண்ணிக்கை	(2) மற்றும் (5) இடையே விகிதாச்சாரம்	மரணம் சம்பவிக்காதவை	(2) மற்றும் (8) இடையே விகிதாச்சாரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
2007	100.69	59140	59	11034	12036	11	48106	48
2008	110.40	60409	55	11813	12784	10.70	48596	44
2009	118.20	60794	51	12727	13746	10.77	48067	41

குறிப்பு: இனம் 4, 7 மற்றும் 9–ல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதாச்சாரம் 10,000 வாகனங்களுக்கு

TRUTH ALONE TRIUMPHS

2010 மே 7]

இணைப்பு–10

(பத்தி-26 பார்க்க)

காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி (கோடியில்)

காவல் துறை நவீனமயமாக்கல் வருடம்	மத்திய அரசின் ஒதுக்கீடு	மாநில அரசின் ஒதுக்கீடு	மொத்தம்
2001–02	68.10	68.10	136.20
2002–03	68.10	68.10	136.20
2003–04	52.47	36.67	89.14
2004–05	56.76	37.84	94.60
2005–06	65.46	21.82	87.28
2006–07	59.40	19.80	79.20
2007–08	75.75	25.25	101.00
2008–09	51.00	17.00	68.00
2009–10	60.67	20.22	80.89
மொத்தம்	557.71	314.80	872.51

இணைப்பு–11

(பத்தி-26 பார்க்க)

காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் பல்வேறு இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி

வ. எண்	இனங்கள்	ஒதுக்கப்பட்ட நிதி – ரூபாய் இலட்சத்தில்								
		2001–02	2002–03	2003–04	2004–05	2005–06	2006–07	2007–08	2008–09	2009–10
1.	கட்டடங்கள்	1720.90	1720.90	1531.00	2624.00	1257.44	1308.00	2615.28	1234.74	2756.81
2.	வீட்டு வசதி	5976.24	5976.24	2255.00	1953.00	3015.75	2562.50	3038.77	1821.77	0.00
3.	வாகன வசதி	2249.50	2249.50	2218.15	1665.65	1837.99	1830.97	1724.43	1349.57	1840.19
4.	ஆயுதங்கள்	187.50	187.50	4.95	191.39	254.66	44.80	0.00	417.26	594.70
5.	தகவல் தொடர்பு	774.32	774.32	235.08	781.52	516.78	247.90	811.67	611.73	320.10
6.	பயிற்சி	966.22	966.22	454.05	621.00	151.00	179.00	280.22	245.63	272.06
7.	த.அ.து , கை.வி.ரே.பி	197.75	197.75	45.00	380.50	308.00	227.82	606.09	186.00	279.40
8.	சாதனங்கள்	1020.38	1020.38	1443.69	700.06	705.45	943.29	292.97	734.77	1854.58
9.	கணினிகள்	527.41	527.41	726.88	361.25	378.30	438.86	595.05	0.00	0.00
10.	ஊர்க்காவல் படை	0.00	0.00	0.00	181.53	134.57	40.50	33.52	62.13	68.89
11.	ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை	0.00	0.00	0.00	0.00	168.09	98.70	102.00	136.40	102.60
	மொத்தம்	13620.22	13620.22	8913.80	9459.90	8728.03	7920.34	10100.00	6800.00	8089.33

2010 மே 7]

இணைப்பு–12

(பத்தி-77 பார்க்க)

31-12-2009 நாளன்று தமிழ்நாடு காவல் துறையில் உள்ள வாகனங்களின் இனவாரியான நிலவரம்



கனரக வாகனங்கள்	:	பேருந்து / லாரி
மிகரக வாகனங்கள்	:	சிறிய பேருந்து / வேன்
இலகுரக வாகனங்கள்	:	கார் / ஜீப்
இரு சக்கர வாகனங்கள்	:	மொபெட் / மோட்டார் சைக்கிள்
இதர வாகனங்கள்	:	வஜ்ரா / க்ரேன் / கைதி வழிக்காவல் வாகனம் / தண்ணீர் பீச்சியடிக்கும் வாகனம் / ஆம்புலன்ஸ் / ஆட்டோரிக்சா